[illegible]

v 6 no. 13 30 March 1983

©

JL
[illegible]211, N28KN
N33.6.13
189146

232

12 APR 1934

212

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹு மார்ச் மீ 30உ [No. 13

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 241
2. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம் B.A.,B.L. 243
3. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 244
4. சோம்பல் - C. சுந்தரையர் B.A. 246
5. அப்பர் (64 கலைகள்-வியாகரணம்-குற்றுகரம்)
E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 247
6. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 249
7. வாலி வதை (ஓர் ஆராய்ச்சி)
V. V. ஸ்ரீநிவாஸாச்சாரியார், B.A.B.L. 250
8. தமிழ்ப் பாடம்
(நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 253
9. பொதிகை நிகண்டு (ஙகாரம், ஞகரம்)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L 255
10. திருக்குறள் நீதி (பொருட்பால்-ஒழிபியல்)
A. இராமலிங்கம் 256
11. வர்த்தமானம் 259

## கலாநிலயம்

### விற்பதற்கே வேண்டும் விலை 2.

189146

“யாமனைவரும் ஒரே விலையினராதலின் இனி அடிமைகளல்லேம்; மற்று, எங்களில் ஒவ்வொருவரும் எம்நாட்டு மன்னவர்க ளாகிவிட்டோம்,” எனப் பறையறையவல்லவ ராயினோர்தம் பாக்கியந் தான் பெரிதென எண்ணுதற் கெம்மா லியலவில்லை. உள்ளொன்றும் வைக்காமற் புறமொன்று பேசுகின்ற சொற்றொடர் ஆரவாரங்களில்இதுவுமொன்று. ‘விலை’ என்ற அவ்வேழைச்சொல் மனிதனுடன் சேருமாயின், எக்கருத்தில் சேர்ந்தாலும், ஒருவகை இழிவையே உணர்த்திநிற்கின்றதே யன்றி, உயர்வினது உவமையை விளக்குந் தரம் அதற்கில்லை. “எற்றிற் குரியர் கயவர் ஒன்று உற்றக்கால் விற்றற் குரியர் விரைந்து” என்னுங் குறளினோடு பொருட்பாலை முடிவிற்குக் கொணர்ந்த திருவள்ளுவர், தம்மை விற்றுக்கொள்ளும் நினைவினோர்க் கல்லது விலைமதிப்பிட் டுரைக்கும் விதியில்லாமையை விளம்பி நகைக்கின்றார். விலை கொளக் குறிப்பினும் இவர்தாம் மக்கள் அல்லரோ எனின், இதற்கு விடையாய், இணையிலா உறைப்பு வாய்ந்த இளஞ்சிரிப்பினோடும், “மக்களே போல்வர் கயவர் அவரன்ன ஒப்பாரி யாங் கண்டதில்” என அவ்வதிகாரத்தின் முதலிலேயே விளம்பியுள சொற்கள் விலக்கரிய வாய்மைவாய்ந்தன.

எனின், விற்றற்குரிய நிலையில் சமவிலை சாதிப்பதால் பெற்றபயன் ஒன்று மில்லாமையுடன் கடக்கரிய கேடுகளே கைவந்து நின்றனவாய் முடியும். வள்ளுவரைத் துணைக்கொண்டு அவருக்கு இணையாயும் நின்று நமக்கு உண்மையாயவோர் நற்கதியை நல்குகின்ற நெறியினை உணர்த்துகின்ற புலவர் பெருந்தகை கம்பர், “ஆற்றல் நல்லறமல்ல தில்லாமையால் ஏற்றமல்லது இழிதக வில்லையே” என்று செப்பிய தத்துவத்தை மாந்தர் மறப்பாராயின், மறந்த வன்றே மரித்தல் நலம்.

திருக்குறள் தந்த வள்ளுவர் பெரியவரோ, அல்லது, இக்காலம் வாய்வந்தன வழங்கும், ‘தலைவர்கள்’—அவர் யாவரே யாயினும்—பெரியவர்களோ! கம்பர் பெரியவரோ, அல்லது இக்காலத்துக் கட்டுரையாளர்தாம், அவர் யாவரே யாயினும், பெரியவர்களோ; மற்று, அப்பெரியாரைப் பேணிக்கொள்வேம் என்னும் நோக்கம் இல்லாத சிறியரே நாம் ஆதலேயோ கடன்!

நல்லறம் ஆற்றுதல் வேண்டும் என்னும் நினைவொன்றினால் மட்டுமே உய்க்கப்பெற் றயாமல், வேறு வகைகளில், எல்லாரும் சமைநிலையடைகின்றதென்னுமோர் படிற்றுரையால் உலகத்திற்கு விளையவல்ல தீமைகள் கோடிகோடி. சோவியத்ருஷியாவைக் கூரை மீதிருந்து கூவிக்கூவி யொன்றுங் கொண்டாடவேண்டா. அறமேநினைவாய் அறமேநெறியாய் அறமே முடிவாய் வழங்குமொருவாழ்க்கையில், “அறமே நோக்கி அறத்தைச் செய்பவர்களாய்” அமையாதவர்கள் குழுமிக் குழுமி முயல்வன பற்பலவாயினும், துன்பமோ ஒருவரையும் விட்டு ஒருபோதும் நீங்காது, என்னும் மேலான வாய்மையை துணிந்துரைக்கின்ற பௌத்தர்தம் விழுமிய நூலொன்றில் பின்வரும் வாசகத்தைக் கண்ணுடையோர் காணலாம்:—

It is hard to leave the world to become a friar, it is hard to enjoy the world; hard is the monastery, painful are the houses; painful it is to dwell with equals to share every thing in common.

—*Translation by F. Max Muller.*

[துறவியாவதற்கு இவ்வுலகத்தை விடுதலும் கஷ்டம், உலகத்தைத் துய்ப்பதும் கஷ்டம்; துறவிமடங்களுங் கஷ்டம், வாழ்மனைகளும் வருத்தமுடையன; எல்லாவற்றையும்பொதுவாகப்பங்கிட்டுக்கொள்வதற்குச் சமநிலையுடையவர்களுடன் வசிப்பதுந் துன்பமே]

இது பௌத்தநூலின் பெருவாக்கு. இது பெரியதோ, புத்தர் பெருமான் பெரியவரோ, அல்லது சோவியத் ருஷியாவைக் காட்டிக் காட்டி அதற்கிணையான 'சீர்திருத்தங்களை' இங்குச் செய்யவேண்டும் என்று இயம்புகின்றவர், அவர்தாம் யாவரே யாயினும், பெரியவர்களோ! பெரியாரைப் பேணிக்கொள்வேம் என்னும் நோக்கம் நமக்கு வாராதவரையில், 'சிறியோரே' என்னும் வள்ளுவர் வசைக்கு இலக்காகி நிற்கின்றோ மென்பதைத் தெரிந்துகொள்ளாத ஏழைமை மிகவும் இரங்கற்பாலதே.

முன்னுரைத்த அப் பௌத்தநூல் இன்னுமொரு உண்மையைச் சொல்கின்றது; அதனையும் இச்செவ்வியில் அறிந்துகொள்வது அவசியமாகும்.

இக்காலம் முயலப் பெறுகின்ற சீர்திருத்தங்களோ எண்ணிறந்தன. இவையனைத்திற்கும் அடியிலேநின்று இயக்குங் கருத்து ஒன்றே. "ஆங்கிலேய அரசாட்சியால் நம்முடைய இரத்தம் அடியோடு வடித்துக் கொள்ளப்படுகின்றது; ஆதலால் சுயராஜ்யம் முதலிய முறைகளால் அரசியலைச் சீர்திருத்த வேண்டும்" என்பது இவைகளனைத்திற்கும் முதன்மையாக நின்று வழங்குகின்றது. அல்லது, "முதலாளிகள் தொழிலாளர்களைக் கொள்ளையடிக்கின்றனர்; ஆதலால், தொழிலாளர் பாதுகாப்பிற்குரிய சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்பார் சிலர். அல்லது "ஆண் மக்கள் பெண்பாலார்தம் உரிமைகளைக் கருதாமல் கொடுமைகள் செய்கின்றனர்; ஆதலின் இத்திறத்தில் சீர்திருத்தங்கள் வேண்டும்" என்பார் சிலர். அல்லது, ஒரு சாதியார் மற்றொரு சாதியார்க்குக் கொடுமைகள் பல செய்கின்றார்களென்கின்ற கருத்தினால் முயலப்படுகின்ற சீர்திருத்தங்களோ கணக்கில. இக் கொடுமைகள் உண்மையில் இழைக்கப் படுகின்றனவோ, இல்லையோ என்பதைப் பற்றியேனும், இச்சீர்திருத்தங்கள் வேண்டப்படுகின்றனவோ அல்லவோ வென்பதைப் பற்றியேனும், யாமொன்றும் இங்கு உரைக்க நினைத்திலம். இவ்விடயங்களை இக்கலாநிலயத்தின்கண் வேறு வேறு இடங்களில் பற்பல வகைகளில் ஆராய்ந்து காட்டியிருக்கின்றோம். இச்சீர்திருத்தகாரர்கள்தம் மனதைத்தான், முன் சொன்ன அப்பௌத்த நூலின் ஒரு வாக்கியத்தைக் கட்டளைக் கல்லாகக்கொண்டு சோதித்துக்கொள்வதற்குரிய ஒன்றினைச் சிறிது உணர்த்தவே இங்கு விழைகின்றோம்.

ஓர் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு முன் சீர்திருத்தகாரர்கள் வழங்கிய உரைகள் எவைகளேயாயினும், இக்காலம் எல்லோர் நாவிலும் எழுந்து வருஞ் சொல், "அன்பு அன்பு" என்னும் அவ்வொன்றே. இச்சொல்லைச் சொல்லிச் சொல்லித் தம் சுயநலத்தையே சூழ்ந்து கொள்கின்ற வஞ்சகர் கிடக்க, சுயநலச் சூழ்ச்சியொன்றும் இல்லாவிடத்தும், "அன்பினால் இத் திருத்தங்களைச் செய்ய முயல்கின்றோம்" என்போர்தம் உரையினது உயரம் அவர்களது நோக்கத்திற்கு முண்டோ என்பதை அயிர்க்காதகல்வது அருமையாகின்றது. அன்பினால் ஒன்று செய்யப் படுவதெனின் அதற்கு அன்பு தானே ஆதாரமாக இருக்கவேண்டு மன்றோ? பகை வளருமிடத்தில் அன்போ ஒருபோதும் அமையா தென்பதும் வெளிப்படை. ஒருவன் தன்னைக் கெடுத்தான் என்ற எண்ணத்திற்கு ஆதாரமாயிருப்பது பகையோ, அல்லது அன்போ! நுணுகிநோக்குங்கால், இந்த எண்ணத்தினாலல்லது, எத்துறையிலும் இக்காலம் நடைபெறுகின்ற சீர்திருத்தங்களில் ஒன்றும் இயங்குவதில்லை என்பது தோன்றுமற் றீருமோ! அவ்வாறிருக்க இவைகளால் யாவர் நெஞ்சத்திலும் பகைமையை வளர்ப்பதன்றி விளைவுதான் வேறொன்றும் ஆவதற்கில்லையே. எனின், பகைக்கே அன்பென்று பேர்வைத்துவிட்டதால், குணமும் செயலும் பயனும் வேறாகிவிடுமா!-' என்ஞான்றும் எஞ்சுவது பகையே.

"He abused me, he beat me, he defeated me, he robbed me"—in those who harbour such thoughts hatred will never cease.

[அவன் என்னை வைதான், அவன் என்னை அடித்தான், அவன் என்னை வென்றான், அவன் என்னைக் கொள்ளை யடித்தான் — இத்தகைய எண்ணங்களுக்கு இடம் கொடுப்பவரைவிட்டுப் பகைமையோ ஒருபோதும் நீங்காது]

என்பது விழுமிய தருமபாதத்தின் திப்பியவாக்கியம். அதன்கண் அடங்கிய உண்மையும் உரைத்தபின் உள்ளங்கை நெல்லிக்கனி. சீர்திருத்த முயற்சிகளனைத்தும், தற்காலம் நடத்தப்பெறுகின்ற நோக்கத்தை ஆராயுங்கால், அவ்வுண்மைக்கு மாறாகிக் கிடக்கின்றன என்பதையும் எடுத்தியம்பல் மிகை. புத்தர் பெரியவரோ, இவ்வுரைக்கு மாறாக இயக்குகின்றவர்கள், அவர்தாம் யாவரேயாயினும், பெரியவர்களோ!

அன்பென்ற சொல், ஆதலால், அவர்களை யறியாமலே பகைவளர்க்கும் பொருளதாய் முடிகின்றது. இதற்கு, இவர்தாம், தம் நெஞ்சறிந்த வஞ்சகக் கள்வர்களேயாகி இருத்தல்வேண்டுமென்பது அவசியமில்லை. வள்ளுவர் கம்பர் புத்தர் முதலிய பெரியோர்களைப் பேணிக்கொண்டு அவர்தாம் காட்டிய மெய்ந்நெறிக்கண் தாமும் நடந்து இயலுமேல் ஏனையோரையும்நடத்துவோம் என்றநோக்கமின்றி, இல்லாத தம் அறிவையே இருப்பதாக நம்பி, வீணே வீணே மீண்டும் மீண்டும் துன்பத்திற்கே, அன்பென்னும் பேரால், உலகத்தைத் தூண்டுகின்ற இவர்தாம், அன்பென்று விளம்புவதனைத்தும் நெஞ்சறிந்த பொய்யல்லா விடத்தும், பொய்யென் றறியாமல் பேசுகின்றார்களாதலால், ஆங்கிலவித்தகர் தாமஸ் கார்லைல் கூறும்வண்ணம்,—"அவர் உரை பொய்யன்று, மற்று—அவர்களே பொய்!"

—•—*—•—

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும். ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[234-வது பக்கத் தொடர்ச்சி]

ஆய தனைத்து மேழைய ளானேன்.

மூக்கறுந்தவித் தங்கைசொன் மிக்க மந்திரமில்லை யென விருந்த இந் நாசமுறு இராவணன், அவளுரைத்த காரணங்களைக்கேட்டு,

ஆமா மதடுக் குமெனுக்கையொ டாவி நைய
வேமால் வினையேற் கினியென்விடி வாகு மென்னக்
கோமா னுலகுக் கொருநீகுறை கின்ற தென்னே
பூமாண் குழலா டனைவவ்வுதி போதி யென்றாள்

["ஆம், ஆம், நீ சொல்வது உண்மையே. இப்பொழுது என் உடலும் உயிரும் வெந்து மெலிகின்றன. வேட்கையிற்பட்ட வினையுடைய எனக்கு என்ன செய்தால் இவ் வருத்தம் தீரும்" என்று இராவணன் வினவ, சூர்ப்பணகை, "உலகிற்கெல்லாம் ஒரு தனி நாயகனான நீ இப்படி அழிவானேன். மலர் அணிந்த மாண்புவாய்ந்த சீதையைக் கவர்ந்துகொள், போ—என்றாள்]

ஒல்லாத காமத்தால் ஒசிந்த அம்மூக்கின் வழி, கரனைத் திரிசிரனைத் தூடணனை அரக்கர் வெள்ளத்துடனும் நமனுக்கு ஊட்டிய இவ்வஞ்சமகள், இம்மூவுலகாள்பவனையும் முடிக்கும்படி இவ்வுரையினைப் புகன்று அகன்றபின்னர், உடழிந்திருந்த இராவணன், உணர்வுகெட்டு, போகாத உயிரின் பொதியினைச் சுமக்கலாற்றாமல் வருந்தினனாய், விசுவகருமனைக்கொண்டு ஆங்கோர் சந்திரகாந்தக்கல் மண்டபத்தைக் கட்டுவித்து அதனுள் அரிதிற்கிடக்க, அங்கு, மணங்கமழ் தென்றற்காற்று மெல்லென மெல்லெனச் சாளரத் தூடுவந்து தவழ்தலும், வாழ்மனையில் ஓர் மாசுணம் வரக்கண்டனன் என்ன வெகுண்டு கலங்கி,

கூவலி னுயிர்த்த சின்னீ ருலகினைக் குப்புற் றென்னத்
தேவரி னொருவ னென்னை யின்னலுஞ் செய்யத் தக்கான்

[கிணற்றிலே சுரந்த சிறியநீரானது உலகத்தை முழுக்கினாற்போல, அற்பதேவர்களில் ஒருவனா இவ்வாயுவும் என்னைத் துன்பஞ்செய்யக்கூடியவ னாயினனே]

என வியந்து, அவனை உள்வரவிட்ட வாயிற்காவலாளரைத் தெழித்துப் பிறகு மந்திரிகளை வரவழைத்து உசாவி, இறுதியில், இந்தியம் அடங்கிநின்ற மாரீசன் இருக்கை சேர்ந்தான்.

மருகன் வரக்கண்ட மாதுலன் பயந்த சிந்தையோடும் உரிய உபசாரங்களைச் செய்து,

சந்த மலர்த்தண் கற்பக நீழற் றலைவற்கும்
அந்த கனுக்கு மஞ்ச வடுக்கு மரசாள்வா
யிந்த வனத்தென்னின்ன லிருக்கைக் கெளியோரின்
வந்தகருத்தென்சொல்லுதியென்றான் மருள்கின்றான்

[மயங்கிய மனத்தனாய் இராவணனை நோக்கி, "அழகிய மலர்களையுடைய குளிர்ந்த கற்பகச்சோலையின் நிழலில் வீற்றிருக்கும் இந்திரனுக்கும் எமனுக்கும் அச்சம் உண்டாம்படி அரசாட்சிசெய்பவனே, இந்த வனத்தில் என் துன்பமுடைய இடத்திற்கு எளியவர்போல நீ வந்திருக்கும் நோக்கம், என்ன, சொல்"—என்றான்]

பொலிவிழந்த இராவணன் தோற்றமோ, மற்று, ஏழையரின்றி ஒருதனி வந்த கொள்கையோ, மாரீசன் அவனை "ஏழையரின் வந்தது என்" என வினவுமாறு செய்தது. இராவணனும் அவ்வளவில், "ஏழையர் போல்வேன் அல்லேன், ஏழையே யான் ஆயினேன்" என்பான்போல்,

ஆன தனைத்து மாவி தரித்தே னயர்கின்றேன்
போனதுபொற்பு மேன்மையுமற்றென் புகழோடும்
யான துனக்கின் றெங்ஙன துரைக்கே னினிதென்னா
வானவ ருக்கு நாணத டுக்கும் வசை மன்னோ

[எல்லாம் ஆய்விட்டது. ஆவிமாத்திரம் வைத்திருக்கின்றேன். அதனையுந் தாங்கமாட்டாமல் சோர்கின்றேன். எனது பொலிவும் மேன்மையும் புகழும் எல்லாம் போய்விட்டன. நான் அதனை இப்பொழுது உனக்கு இனிதாக எப்படி எடுத்துச்சொல்வேன், என்று சொல்லி (மீண்டும்) வானவருக்குநான் நாணவேண்டியவொரு பழியாயிற்றே—என்று மேலுஞ் சொல்லுவான்]

இந்திரனும் எமனும் அஞ்ச அடுக்கும் தன் ஆட்சியழிந்து இப்பொழுது தான் வானவருக்கும் நாண அடுக்கும் பழிபூண்டு நிற்கும்படி அனைத்தும் ஆயது என இராவணன், மாரீசன் வினவிய சொற்களுக்கு ஏற்புடை இயற்கையோடு துவக்குகின்ற இந்நயம் மிகவும் அழகுடைத்து. இருவர் உரையாடும்பொழுது ஒருவர் மொழியைத் தழுவி மற்றவர் மாற்றம் வருவது இயற்கை. இவ்வியற்கைக் கிணங்கப் புலவர் தம் பாத்திரங்களின் சொற்களை நிகழ்த்துவது நாடகச் செவ்வியின் நயம்பெறத் திகழும். "அமரரும் அஞ்ச அடுக்கும் ஆட்சியுடையோய், நீ ஏழையரின் வந்தது என்?" என்றவுடன், "போயிற்று, போயிற்று, அந்தக் காலமெல்லாம் போயிற்று, இப்பொழுது அவ் வமரருக்கு நான் நாணுவதே அடுக்கும்காண்" எனத் தான் வந்தசெய்தியை எடுத்துரைக்கத் துவக்குமிச் செம்மை ஒன்றுமே, ஒரு புலவரது பெருமைக்குச் சான்றாக நிற்கவல்லது. எனினும், கம்பநாடகத்தின் சிறப்புக்களினிடையே இதுபோன்ற நுண்ணிய பல நயங்கள், கண்ணுக்குத் தெரியாமற் போய்விடுகின்றன. இதன் அருமையை அறிதற்கு, வான்மீகத்தில், மாரீசனும் இராவணனும் உரையாடப்புகும் வகையினை ஒப்புநோக்குதல் உதவிசெய்யும்—

மாரீசன் மனிதர்களால் செய்யமுடியாத உபசாரங்களைச் செய்து அரக்கராஜனை ஏற்றுக்கொண்டான். அவன் ஆகாரம் தீர்த்தம் முதலியவைகளைத் தானே இராவணனுக்குக் கொண்டுவந்து கொடுத்து அவனைப் பார்த்துப் பின்வரும் பொருள் பொருந்திய சொற்களால் "ராக்ஷசேந்திரா, இலங்கையில் எல்லாம் க்ஷேமமா? யாது நிமித்தம் நீ இவ்வளவு சீக்கிரமாக மறுபடியும் இங்கே திரும்பி வந்தனை?" என்று வினவினான். இவ்வாறு மாரீசன் வினவ, அவனைப்பார்த்து, பேசுவதில் சமர்த்தனான மிக்க வலியுள்ள இராவணன் சொல்லலுற்றான்.

"ஓ மாரீசா, நான் சொல்லுவதைக் கேள். எனக்கு மிகுந்த துக்கமொன்று நேர்ந்திருக்கிறது. துக்கமடைந்தவனை அத் துக்கத்திலிருந்து நீக்கிவைக்க நீதான் வல்லவன். ஜனஸ்தானத்தில் என் தம்பி கரனும், மகாபலமுள்ள தூஷணனும், எனது தங்கை சூர்ப்பணகையும் இருந்தது உனக்குத் தெரியுமே. மனிதர் மாமிசத்தைப் புசிக்கும் மகாபலம் பொருந்திய திரிசிரசனும் அங்கிருந்தான். இன்னும் அநேக வீரர்களும், போரில் இச்சையுடைய அரக்கர்களும் எனது கட்டளையால் அவ்விடத்தில்

சுகமாக வசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அவ்வரணியத்தில் தங்கள் இயற்கைக்கொத்தபடி தர்மம் செய்பவர்களை வருத்திக்கொண்டிருந்தார்கள். இவ்வண்ணம் பதினாலாயிரம் அரக்கர்கள் கொடிய செய்கைகளைப் புரிந்துகொண்டு கரனுடைய இஷ்டப்பிரகாரம் நடந்துகொண்டு யுத்தத்தில் மிகத் தேர்ந்தவர்களாய் அவ்விடத்தில் வசித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஜனஸ்தானத்தில் பல ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கரனை முன்னிட்டு இராமனைப் போரில் எதிர்த்தார்கள். இராமன் அதைக்கண்டு கோபங்கொண்டு அவர்களை ஒன்றுங் கடிந்துபேசாமல் வில்லில் அம்புகளைச் சந்தித்து விடுத்தான். வெகு பலம்பொருந்திய அப்பதினாலாயிரம் அரக்கர்களும் பாதசாரியாய் யுத்தம்செய்த மனுஷனாகிய இராமன் ஒருவனால் கொல்லப்பட்டார்கள். போரில் கரனும் மாண்டான்; தூஷணனும் மாய்ந்தான்; திரிசிரனும் மடிந்தான். தண்டகாரணியமும் பயம் நீங்கியது. கோபமடைந்த தனதுதந்தையால் மனைவியுடன் காட்டுக்கோட்டப்பட்டஅற்பக்ஷத்திரியனும்; ஆயுளிழந்தவனுமான இராமன் அந்தப் பெரிய அரக்கர் சேனையை அழித்தான். அவன் கெட்ட நடைக்காரன்; வெகு குரூரமானவன்; பொல்லாதவன்; புத்தியீனன்; அற்பன்; தன் புலன்களை அடக்காதவன்; தருமமற்றவன், பாவி; எப்பொழுதும்எல்லாப்பிராணிகளையும் இம்சிப்பவன். அவன் தன்பலத்தின் செருக்கால் கொஞ்சமேனும் பகையில்லாத எனது தங்கையின் காதுகளையும் மூக்கையும் அறுத்து அவளுடைய உருவத்தைக் குலைத்தான்.

தேவப்பெண்ணுக் கொப்பான அவன் மனைவி சீதையை நான் ஜனஸ்தானத்திலிருந்து எடுத்துவரப்போகின்றேன். அவ்விஷயத்தில் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும். மகா பலம்பொருந்திய மாரீசா, நீ ஒருவன்மட்டும் என்க்கு உதவியாக என்பக்கத்தில் நின்றால் கும்பகர்ணன் முதலான எனது சகோதரர்கள் தேவர்களுடன் கலந்து என்னைப் போரில் எதிர்த்தபோதிலும் நான் அவர்களை லக்ஷ்யம் பண்ணமாட்டேன். ஆகையால், நீ எனக்கு உதவிசெய்யவேண்டும். நீ வெகுவல்லவன். யுத்தத்திலும், பராக்கிரமத்திலும், செருக்கிலும், உனக்கொப்பானவர்கள் ஒருவருமில்லை. நீயோ பலவித உபாயங்களை அறிந்தவன்; பெரிய சூரன்; சகல மாயைகளிலும் தேர்ந்தவன். இக்காரணத்தைக் கொண்டுதான் நான் இப்பொழுது உன்னிடம் வந்தேன். நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி இன்னதென்பதை நான் சொல்லுகிறேன் கேள். நீ அழகான வெள்ளிப் புள்ளிகள் அமைந்த ஒரு பொன்மானாக உருவமெடுக்கவேண்டும். அவ்வுருவுடன் இராமனாச்சிரமம் சென்று, நீ சீதையின் முன்னர் உலாவவேண்டும். அவ்வாறு உலாவும் உன்னைச் சீதை உண்மையாகவே ஒரு மானாக எண்ணித் தனது கணவனையும் அவன் தம்பி லக்ஷ்மணனையும் பார்த்து உன்னைப் பிடித்துக்கொடுக்கும்படிவேண்டுவாள். அவ்விருவர்களும் உன்னைப்பிடிக்க ஆச்சிரமத்தைவிட்டுப் புறப்பட்ட பின்பு, ஒருவித இடையூறுமின்றி, சந்திரனது காந்தியை இராகு விழுங்குவதுபோல், நான் சீதையை எடுத்துச்செல்வேன். தனது மனைவி போய்விட்ட துயரத்தால் வருத்தமடைந்த இராமனை, நான் காரியம் நிறைவேறப்பெற்றுச் சந்தோஷமடைந்த மனத்தை உடையவனாய், வெகு எளிதாக வதை செய்வேன்."

இது கதைமுறையாதலால், "என்பாட்டில் நான் கேட்கவேண்டியதைக் கேட்டுவைக்கின்றேன்" என்று ஒருவன் வினவுவதும், மற்றவன் "நானும் என்பாட்டில் சொல்லவேண்டியதை (பெரும்பாலும் வேண்டாதவைகளையுங்கூட)சொல்லிவிடுகின்றேன்" என்று மறுமொழி வளர்வதுமாகி நேர்கின்றதேயன்றி வேறில்லை. ஆயினும், "பொருள் பொருந்திய சொற்களால்" மாரீசன் கேட்டானென்றும், "பேசுவதில் சமர்த்தனான" இராவணன் பதிற்சொன்னானென்றும் முனிவரே வற்புறுத்திக் கூறுகின்றார். மற்று, அதனில் உள்ள பொருளையேனும் இதனிலுள்ள சாமர்த்தியத்தையேனும் காண்பதற்கு, வான்மீகர் வாய்மையில் அதிக நம்பிக்கை இன்றியமையாதது. அந்நம்பிக்கையும் பயன்படாவிடத்து நமக்குக் கைதரவல்ல சூழ்ச்சியொன்றுளது. இவ்வளவேனும் இவ்வரக்கர் பேசினாரே என இம்முனிவரர் பரிகசித்தனர் போலும். அல்லது அவரும் அறியாமலே அனைத்தும் பரிகசமாய் முடிந்ததோ, யாதோ! ஐயமற இதனைத் தெளிதலருமை.

---

# தேவகி

[226-வது பக்கத் தொடர்ச்சி]

## அத்தியாயம் 8.

குடந்தைமாநகரை நான் விட்டுவந்து வருடமும் ஒன்றானது. இதுவரை என் மாமியினிடமிருந்து ஒரு கடிதமும் நான் பெற்றதில்லை. என்பால் அன்பு மிகக் கொண்ட தையம்மாளும் என்னருமைத்தோழியரும் அடிக்கடி எழுதி வந்தனர். தையம்மாள் கடைசியாக எழுதிய கடிதமும் இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் வந்தது. இந்நிலையில் ஒரு நாள் குடந்தை முத்திரையுடன் ஒரு கடிதம் கைவர அது யாரிடமிருந்து வந்திருக்கலாம் என்பதை என்னால் தெளிய இயலவில்லை. என் தோழியர் கையெழுத்தை அறிவேனாதால் அவர்களது கடிதமும் அன்று. பிரித்துப் பார்த்தேன். உள்ளிருக்கும் கையெழுத்து என் மாமியினதாக விருக்கவே நான் அடைந்த வியப்பினிற்கு அளவேயில்லை. படித்தேன்:—

"பெண்ணே,

இரண்டு வாரத்திற்கு முன் என்னைப்பற்றிய காய்ச்சல் நாளுக்கு நாள் கடுமையுற்று வருகின்றது. என் குடும்பம் உற்ற மெலிவேபோல், என் உடலமும் மெலிந்துவருகின்றது. உன்னோடு சொல்வதற்கொன்றுளது. எனவே உடனே புறப்பட்டு வந்துசேருவாய்.

இப்படிக்கு,
அம்புஜம்."

கடித முறையும் அது கொண்ட உரையும் என்னை வியக்கச் செய்தன. கடிதமுறையை ஒட்டியேனும் என்னை ஆசீர்வதிக்கவும், க்ஷேமம் விசாரிக்கும் அவளுக்கு மனமில்லை. அவளது இம் மனமிலாமைக்கு நான் எக்குற்றம் புரிந்தனனோ. என்னை யேன் அழைக்கின்றாள்; எனக்கென அவள் வைத்துள செய்தியும் யாதோ; என்று அடிக்கடி கேட்டுக்கொண்டேனானும் விடையொன்றும்ஏற்படவில்லை. அவளது கடிதத்தின் துணைகொண்டு அவள் உள்ளத்தின் கருத்தை அறிய முடியவில்லை. குடந்தை செல்வதா, அல்லது போகாதிருந்துவிடுவதா என்று சிந்தித்தேன். இச் சிந்தனையில் அப்பகல் அகன்றதே யல்லால் முடிவொன்றும் காண இயலவில்லை. இரவின் பெரும்பாகமும் இச்சிந்தனையிலேயே கழிந்தது. இறுதியில் என் குலதெய்வத்தைத் தொழுதவளாய்த் திருவுளச் சீட்டுப் போட்டேன். அகப்பட்ட சீட்டு என்னைப் போய்வருமாறு பணித்தது. போவதென்று தீர்மானித்துக் கொண்டு, அப்பொழுதே கடிதம் ஒன்றை எழுதினேன்—

"மாமிக்கு எளியள் தேவகியின் பணிவுடையநமஸ்காரம். நீங்கள் நோயுற்றிருப்பது அறிய வருந்துகின்றேன். இரண்டொரு தினங்களில் தங்களைக் காண்பதற்கு வந்துசேர்வேன். சிரஞ்சீவி விஜயனுக்கும் ஸௌபாக்கியவதி கோமளத்திற்கும் என் அன்பைத் தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக்கு,
எளியவள் தேவகி."

இக்கடிதத்தை எழுதி முடித்துவிட்டு மிகுந்துள்ள அவ்விரவின் சிறுபாகத்தை ஆழ்துயிலில் கழித்தேன்.

பொழுதுவிடிந்தது. விடிந்தபொழுதுமாமிஎனக்கு வைத்திருக்கும் செய்தியை அறியவேண்டுமென்னும் அவாவை என்னிடம் வளர்த்தது. "இனி என் கன்னத்திற்குக் கேடொன்றும் நேராது. என்னருமைத் தோழியரையும், நல்ல வென் தையம்மாளையும் காணலாம்" என்று எண்ணியெண்ணி மகிழ்ந்தேன். என் மனம் சிறிதுசிறிதாகக் குடந்தையைநோக்கிப் படரலாயிற்று. யாரிடம் விடைபெற்றுச் செல்வது என்றுதான் விளங்கவில்லை. அன்னையாரோ ஊரில் இல்லை. அவர் எப்பொழுது திரும்புவார் என்றும் தெரியவில்லை. இவ்விஷயத்தை எப்படி ஜமீன்தாரிடம் தெரிவித்து விடைபெறுவதென்று சிந்தித்தேன். அவரிடம் நேரிற்சென்று விஷயத்தைச் சொல்லி விடைபெற்றுக் கொள்ளலாமோ எனின் அன்னதற்குரிய தைரியம் எனக்கில்லை. கடிதம் ஒன்று எழுதியனுப்பலாமா என்று எண்ணினேன். ஆனால் எப்படிக் கடிதத்தைத் துவக்குவது, எப்படிமுடிப்பது என்றுதான் தோன்றவில்லை. அவருக்கு எழுதுகின்ற உரிமைதான் எனக்குண்டோ என்று அயிர்த்தேன். இன்னபடி எண்ணமிட்டுக்கொண்டிருந்த நான் அவ்வழிச் சென்ற ஏவலாளன் ஒருவனை அழைத்து, "அப்பா, ஜமீன்தார் இருக்கின்றாரா" என்று கேட்டேன்.

"அம்மா, இல்லாது எங்கே போகப்போகின்றார். சோம்பேறி நண்பர்களும், இச்சகம்பாடும் இழுதைகளுமாய்ச் சூழ்ந்துகொண்டு அவரை வெளியேற்றாதவரையில் அப்பெருமகன் எங்குச் செல்லப்போகின்றார். உத்தமியும் மாண்டாள். அத்துடன் குலைந்தது அவர் மாட்சியெல்லாம். எல்லாம் விதியின் செயல்... ஈதெல்லாம் நமக்கு எதற்கு? அவனன்றி ஓரணுவும் அசையாது. அம்மா, அவர் இருக்கின்றார். இல்லையம்மா, இப்பொழுது வண்டியேறி வெளியே சென்றார். நாளை வருவார் என்று சொல்கின்றனர்." என்று கூறி யகன்றான்.

நாளை யவர் வாராராயின் என் செய்வது என்று மயங்கினேன். செய்வது யாதெனத் தெரியவில்லை. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நிகழ்த்துகின்றது. கடவுளது திருவுள்ளம் நடப்பதாகுக. அவர் நிகழ்த்துவதெல்லாம் நன்மைக்கே ஆகும் என்று எண்ணி ஒருவாறு அமைதியுற்று இரவில் எழுதிய கடிதத்தைத் தபால்நிலயத்திற்கு அனுப்பிவிட்டேன். மறுதினம் மாலைவரை ஜமீன்தார் திரும்பவில்லை. குடந்தையின் நினைவு என்னை வருத்த ஆரம்பித்தது. மாமி வைத்திருக்கும் செய்தியை அறியவேண்டுமென்று என் உள்ளம் துடித்தது. தெருவிலே ஓடுகின்ற வண்டியெல்லாம் வேறுவழி கடந்தனவேயல்லாமல் மாளிகைக்குள் ஒன்றும் நுழையவில்லை. மனச்சலிப்புற்றவளாய் என்னறையினுட் சென்று ஓரிருக்கையில் சாய்ந்துகொண்டு கண்களை மூடிக் கடவுள்பால் மனதைச் செலுத்தினேன். கையறு நிலையிலுள்ளார் வேறென் செய்யக்கூடும்.

திருவுளம் நிகழ்கின்ற நெறியினை யாரே அறிவார். நான் உற்ற சலிப்பெல்லாம் அகன்றொழிய என் முன் ஜயரங்கபூபதியார் நகைபொலி முகத்துடன் நின்றுகொண்டிருந்தார். எதிர்பாராத இவ்வரவு என்னைத் திடுக்கிடச் செய்தது. எழுந்து ஒரு சிறைஒதுங்கி நின்றேன். சிறிதுநேரம் சும்மாவிருந்த ஜயரங்கர், "விடையும் பெறாமல், அகல்வது முறையோ பெண்ணே" என்று திருவாய் மலர்ந்தார். அவர் உரையினைத் தொடர்ந்து, ஐய...எனத் திறந்த வாய் மேலுரைக்க இயலாமல் மூடவே, "பெண்ணே, விளியைத்தொடர்ந்த மௌனத்தின் கருத்தறியும் ஆற்றல் எனக்கில்லை. நான்கர்ணன் அல்லனாயினும், நீயும் பசுந்துளபத் தார் மார்பன் அல்லள், எனவே என்னுயிருக்கு நான் அஞ்ச வேண்டா. நின் விருப்பம் யாதென இனிக் கூறலாம்" என்று சிறிது நகைத்துக் கூறினார்.

"பெரும, எனக்கு இரண்டுவாரம் விடுமுறை தந்தருளவேண்டும்."

"விடுமுறை வேண்டுமோ. எற்றுக்கு? நம்மதத்தில் விடுமுறைக்கு இடமில்லை. இருக்கின்ற வேலையினில் நிரந்தர விடுமுறையைக் காண்பதல்லால், விடுமுறையென்ற ஒன்றைக் கடவுளரும் விரும்பவில்லை. மனவோய்வு பெறாதாரே வேறு ஓய்வென்று தேம்பித்திரிவர். அவர் என்றும் ஓய்விலாதவரே. பேதைமையில் பிறக்கின்ற இவ்விடுமுறை நல்லாய் நமக்கு வேண்டா."

"பெரியோய், நான் கற்றதும் சிறியதே. தத்துவம் பேசவும் கற்றதில்லை. குடந்தையில் இருக்கும் என் மாமன் மனைவியைக் காண்பதற்கு நான் போகவேண்டும். இரண்டு தினங்களாகத் தங்கள் விடையைப் பெறவே காத்திருந்தேன். எனக்கு விடையருள்வீர்."

ஐயன் மறுமொழியொன்றும் கூறாமல் என்னை நோக்கியவண்ணம் நிற்கவே, "பெரும, என்னுடைய மாமன்மனைவி நோயுற்றுளாள். என்னை உடனே புறப்பட்டு வருமாறு எழுதியுள்ளாள். நான் செல்லவேண்டும். விடை யெனக்குத் தந்தருள்வீர்" என்று மீண்டும் இரந்தேன்.

"குடந்தையில் ஓர் மாமன்மனைவி யிருக்கின்றாள்? அங்குச் செல்லவேண்டும்! பொய்க்கலையும் பயின்றுளாயோ. நல்ல அநாதை நீ. மாமன் மனையும் மாமியும் இருக்க இங்கு ஏன் வந்தாய்."

"மாமன் இறந்த பின்னர், அம்மனை தங்கி அவர்களுக்குச் சுமையாயிருக்க மனமில்லாமல் அதனைத் துறந்து இப்பதி யடைந்தேன். என் மாமியும் பிள்ளை பெண்க ளுடையவள்."

"மாமியின் அனுமதி பெற்றே இங்கு நீ வந்தாய் என்று நான் நினைக்கின்றேன்."

"நான் அங்கிருப்பதை அம்மாதரசி விரும்பவில்லை என்பது கண்டு ஒருநாள் வெளியேறினேன்."

"அவ்வம்மையார் நீ அங்கிருப்பதை விரும்பாததேனோ."

"என் பொல்லா விதியொன்று அவள்மனம் புக்குழக்குமேல் மற்று அவள் வேறு என்செய்வாள்."

"மற்று, நீ குடந்தைபோகத்தான் வேண்டுமோ?"

"என் மாமன் மனைவி நோயுற்றிருக்கின்ற செய்தி தெரிந்தும், அவள் என்னை வருமாறு அழைத்துமிருக்க நான் போகாதிருப்பது பிழையாகாதோ. நாளையே நான் போகவேண்டும், விடைதந் துதவுவீர்."

"எப்பொழுது திரும்புவாய். மாமியின் உறவினில் பெருகப்போகும் நீ, இராணியையும், இம்மனையையும், என்னையும் மறந்துவிடுவாயோ."

"நான் மறக்காது நினைப்பதால் யாருக்கும் எந்நன்மையும் விளையப்போவதில்லை யெனினும்; நல்லவர்களை மறக்கும் பழக்கம் இதுவரை நான் கைவரப்பெற்றதில்லை. இரண்டு வாரத்திற்குள் நான் அவசியம் திரும்பிவிடுவேன்."

"உன்னை அழைத்தேக யாராவது வந்திருக்கின்றனரா? அல்லது வழித்துணைக்கு இங்கிருந்து யாரையாவது அழைத்துச் செல்லப்போகின்றனையோ."

"தங்களது ஆசியே எனக்குக் காப்பாக வழித்துணையொன்று எனக்கு வேறு வேண்டுமோ. தனியே தான் செல்கின்றேன்"

"நல்லது நங்காய், போய்வா, உன் விருப்பத்திற்கு இடையூறு செய்யமாட்டேன். இந்தா இந்த ஐம்பது ரூபாயை உன் வழிச்செலவிற்கு வைத்துக்கொள். பதினைந்து தினங்களில் நீ தவறுமல் திரும்பிவிடுவாய்" என்று சொல்லி இரண்டடி நடந்தவர், மறுபடியும் என்னைத் திரும்பி நோக்கி, "பெண்ணே, நான் விரைவினில் மணந்துகொள்ளப்போகின்றேன். என் அன்னையும் முனைந்துவருகின்றார்" என்று மணவோலை கூறி என் வாய்பார்த்து நின்றார்.

"என்னருமை இந்திராணி தாயொருத்தியையும், அன்னையார் மருகியையும் பெறுவதில் என்னினும் மகிழ்பவர் ஒருவரும் இரார்" என்று எதிர்மொழிந்து தலைகவிழ்ந்து நின்றேன். என் அண்ணலார் மெல்லிய சிரிப்பொன்று சிரித்துவிட்டு அகன்றுபோனார்.

ஜயரங்கபூபதியார் சிரித்த அச்சிரிப்பில் பொருந்திய பொருள் எனக்கு விளங்கவில்லை. எனினும் அவர் படித்த அம் மணவோலை என்னுள்ளத்தில் அம்பெனப் பாய்ந்தது. கூலிக்கு வேலை செய்யும் ஒருத்தியை எஜமானன் மணம்செய்துகொள்வதென்பது ஒவ்வாத செயலாகும் என்பதை நான் அறிவேனாயினும், என் மனமோ அவருக்கு மனைவியாய் வரவிருக்கும் ஒருத்திமீது வேகவே ஆரம்பித்தது. அன்று எனக்கு உணவும் பிடிக்கவில்லை. நான் அன்றிரவு உறக்கமும் கொள்ளவில்லை. நெடுநேரம்வரை படுப்பதும், எழுந்திருப்பதும், அங்கு மிங்கும் நடப்பதுமாய் உழன்றேன். என் செய்வது? அவர்மீது குற்றமில்லை. என் நிலையிலுள்ள ஒரு பெண்ணை அவர் மணக்க இசைந்தாலும் உற்றரும் உறவினரும் ஏற்பரோ? ஊரார் ஏசாரோ? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுதல் பேதைமை யன்றோ? இன்னவாறு உன்னி ஒருவாறு என்னையே தேற்றிக் கொண்டு கண்ணயர்ந்தேன்.

பொழுது விடிந்ததும் குடந்தை செல்வதற்குரிய முயற்சியில் ஈடுபட்டேன். தையம்மாளும், தோழியரும் என் நினைவைவிட்டு நீங்காமலிருந்தனர். மாலையின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். மாலையும் மெல்ல வந்தெய்தியது. நானும் குடந்தைக்குப் பிரயாணமானேன்.

# சோம்பல்

நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

உலக வாழ்க்கையின் இன்பத்துக் கிடையூறாய் நின்று நலியும் பேய்களில் சோம்பல் என்பது ஒரு பெரும்பேய் என்ற மெய்ம்மையை அனைவரும் அறியினும், கல்வியாளர் இந்த உண்மையை மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றனராதலால், இப்பேய்க்கு வசப்படாத மனிதரே யில்லை எனலாகும். சோம்பலின் ஆட்சிக்குள் அகப்படாத திடமனதுடையவர்களும், இப்பேய்க்கு முற்றிலுந் தோற்பதில்லையாயினும், அதனால் அடிக்கடி தாக்கப்பட்டுவருகின்றனர் என்பது திண்ணம்.

நாம் தற்காலத்தில் செய்யவேண்டிய கருமங்களில் கருத்துவைப்பது நியாயந்தானெனினும், முன்னே தோன்றும் அபாயங்களையும் வருத்தங்களையும் உன்னி மனமழியாமல், அவற்றை அகற்றவல்ல சாதனங்கள் அக்காலத்தில் ஏற்படலாமென்ற எண்ணத்தின் வலிய வஞ்சனைக்கு உடன்படுகிறோம். அத்தகைய சங்கடங்கள் ஒருகால், நம்மை எவ்வேளையும் நலியாமல் நீங்கலாமென்றேனும், அவ்வாறு நேர்வதாயினும், வெகுநாள் முன்னரே யுள என்றேனும், எளிதில் மனத்தை ஆற்றிக்கொள்கின்றோம். இவ்வாறு நாடொறும் கவலைக்கடலில் நீந்தியும், சற்றே மனமாறித் தூங்கியும், மறுநாளெழுந்தவுடன் பண்டேபோல் மனஞ்சுழன்றும் நம்முடைய கடவநாட்களைக் கழித்துவருகின்றோம். செயற்பாலனவற்றைச் செய்ய மனோதிட மிலமெனத் தெரிந்தும் பற்பல சங்கற்பம் செய்கின்றோம்; செய்யும் சங்கற்பங்களை நிறைவேற்றுமல் விட்டதற்குப் பொய்க்காரணங்கள் கற்பித்து நமது பயத்தைப் போக்குகிறோம். தினந்தினம் நாம் காணும் கஷ்டங்கள் நமது மனவுறுதியைத் தளரச் செய்கின்றன; நமது பயம் அதிகரிக்க அதிகரிக்க, பயத்தின் ஆட்சி வலிமையடைகிறது. நாம் பயப்படும் சங்கடங்களைத் தீர்க்கவல்ல தருணத்தை வாளா இழப்பதுமன்றி, சோம்பலினால் பயம் நீண்டு, நமது முன்னிற்கும் இடரை அடர்க்க வலிமையும் குறைகின்றது. முன் சம்பவிக்கப்போகும் கேடுகளை அவை நேரிடுவதற்கு முன் எதிர்ப்பதே ஆண்மை. நாம் ஓடி ஒளிக்க முயலினும் அவை நம்மைப் பின் தொடர்ந்து தவறுமல் பற்றிக்கொள்ளும் என்றுதெரிவதே அறிவு;



அவற்றின்கொடுமையிலுள்ள உண்மைத்துன்பங்களை அனுபவிப்பதுபோதும்; அவை வருமேஎன்ற பீதியாலும், வந்தால் என்செய்வது என்ற ஏக்கத்தாலும் உண்டாகும் கிலேசங்கள், அவற்றைவிடப் பதின்மடங்கு அதிகம் என்பதைத் தெரிந்துகொளல் வேண்டும்.

மனம் வருந்துவதைப் பார்க்கிலும் உடல் உழைப்பது எளிது. ஆயினும், சோம்பலினால் சோர்வடைந்து, அதை ஒழித்தாலன்றி அணுகாத வாழ்க்கைச் சுவைகளை எண்ணி ஏங்குவோர் எண்ணற்றவர்களை நாம் தினந்தோறுங் காண்கின்றோம். ஒரு தின்பண்டம் கைக்கெட்டினும் அதை வாய்க்குள் செலுத்தும் சிரமத்தைப்பெரியதாக நினைக்கும் சோம்பேறிகளும் உளர். தூங்குமூஞ்சிகள் நிறைந்த இக்காலத்தில், குறை முறையீடுகளும் முணு முணுப்பும் எங்குங் காணலாம். இவர்கள்குறைகளுக்குத் தங்கள் முயற்சியின்மையும், தம் பிரயத்தனத்தால் தமது எண்ணம் நிறைவேறிக் காரியம் கைகூடுமோ என்ற சந்தேகமுமே காரணங்கள். இவர்கள் தங்கள் துன்பங்களைத் துடைக்க ஆற்றல் படைத்தவராயினும், சோம்பல் என்னும் பேயால் பீடிக்கப்பட்டவர்கள். சோம்பலும் பயமும் ஒன்றுசேர்ந்தே காணப்படுகின்றன. உழைப்பால் விழைந்ததைஅடையலாகுமோ என்றசந்தேகம்தோன்றி இவர்கள் பயம் மிகக் கொண்டு வாளா இருந்துவிடுகின்றனர்; அன்றேல், முன்னர்த் தங்கள் திடமற்ற முயற்சியால் காரியம் சித்திக்காததை நினைந்து வருந்தி முயற்சியை முனிந்து வேலையை வெறுத்துப் பயத்தால் பீடிக்கப்படுகின்றனர். இவ்வாறு மனதில் பயம் குடிகொண்டபின், அவ் வச்சம் அகல்வதற்கு ஏதேனும் உபயோகமான ஒரு வேலையைக் கைக்கொள்வதன்றி வேறு வழியில்லை. அப்படி அவ் வச்சமானது நீக்கப்படாவிடின், அதனால் விளையும் தீமைகள் பல. வாழ்க்கையின் இயற்கைத் துன்பங்களன்றியேயும், பயத்தால் தோன்றுங் கஷ்டங்களையும் நாமே கற்பித்துக்கொண்டு மனத்தைப் புண்படுத்திக்கொள்கின்றோம்.

முன்னிற்கும் நன்மையைக் கைவிட்டுத் தற்காலசுகத்தையே நாடுவோர்களில், சோம்பறிகளே மிகவும் எளியவர்கள். மற்றையரோ காமாதி சுகங்களை ஒருவாறு அனுபவித்தேனுங் கெடுகின்றனர். இவரோ, வேலைசெய்தால் தவறுமல்வருங் கூலியையிழந்து, யாதொரு பயனுமின்றிச் சோம்பலெனும் கடலில் ஆழ்ந்துவிடுகின்றனர்.

சோம்பலினால் மனவமைதி ஏற்படும் என்று ஒருபோதும் எண்ணவேண்டா. மனதும் மனச்சாட்சியும் சோம்பலின் கோட்டைக்குள் புகுந்து ஓயாமல் வருத்துமே; அவைதாம் அவர்களைப் படுக்கையைவிட்டெழுப்பச் சக்தியற்றவை யெனினும், தூங்கவொட்டாமல் ஆரவாரஞ் செய்யும் ஆற்றலமைந்தவை. நமது வாழ்க்கை நலத்துக்கு வழி நாடாமற் கழிக்குங் காலத்தைக் கைப்பற்றப் பேய்கள் பல காத்திருக்கின்றன.

சுறுசுறுப்பும் நுட்பபுத்தியு முள்ளவர்களைச் சிலபோதுபிடிக்கும் சோம்பல் வேறுவகுப்பைச்சேர்ந்தது. பற்பல சாஸ்திரங்களை ஒரே சமயத்தில் ஆராய்ந்தும், விசாரிக்கும் விஷயங்களைப் பல பக்கங்களினின்றும் சோதிக்க விரும்பி அதற்கு அநுகூலங்கள் கிடைக்கும் வரையில் தாமதித்தும் நிற்கும் மனிதர்கள் தம் எண்ணம் பலிக்குமுன் ஏதேனும் சில இடையூறுகளால் தகைக்கப்படுகின்றனர். எல்லாவித சௌகரியங்களும் அமைந்ததொரு அரண்மனை கட்ட விரும்புகின்றவன் வாழ்நாள் முழுவதும் உலகத்தைச் சுற்றித்திரிந்து அல்லல்பட்டு அஸ்திவாரம்நாட்டவும் ஆரம்பஞ்செய்யான். யாதானுமொரு முக்கியமான விஷயத்தைப்பற்றி ஒரு புத்தகம் எழுதப் புகுவோன், அநேக புத்தகங்களைத்திரட்டவும் புரட்டவும், தான் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஒட்டிய சாஸ்திரங்களைப் பயிலவும் எண்ணங்கொண்டு, தான் எழுதக்கருதிய புத்தகத்தை எழுதத் தனக்கு யோக்கியதை யுண்டென்று தீர்மானிக்குங் காலத்தை ஒருநாளுங் காணமாட்டான். சிறப்பின் உச்சியையும், விஷயத்தின் பூர்த்தியையும் மனத்தால் பாவிக்கும் சக்தியுள்ளவன் அவற்றின் அருமையை உணர்ந்து அதை அடையமுடியாத ஏக்கத்தால் தான் செய்யக்கூடியதான ஒரு நற்காரியத்தைச் செய்யும் தருணத்தை யிழக்கிறான்.

கல்வி கரையில கற்பவர் நாட்சில என்பதை நன்குணர்ந்து தான் செய்யநினைந்த நற்கருமங்களை ஒவ்வொரு மனிதனும் விரைவில் செய்ய முயல்வது அவசியம். உழைப்பினாலேயே ஒரு காரியம் நிறைவேறிவிடாது. நாம் எவ்வளவு தான் ஓவாது நின்று உழைப்பினும் நம்மைக் கூற்றுவன் குறுக்கிடக்கூடுமென்பதுண்மை யெனினும், ஒரு நல்ல விஷயத்தில் முயன்று அதில் வெற்றிபெறுவிடினும், அதற்கு உழைத்து உயிரிழக்கின்றோம் என்ற யோக்கியதையையேனும் நாம் பெறலாமே:

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[223-வது பக்கத் தொடர்ச்சி]

வன்றொடர், இடைத்தொடர், மென்றொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், நெடிற்றொடர் என்னும் அறுவகைக் குற்றுகரங்களில், இடைத்தொடர்க் குற்றியலுகரம், ஒரே ஒற்றுக்குப்பின் வரும்:—

"ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொட ராகா"
(தொல். எழு—407.)

என்பது இதன்விதி. "ஈர்க்கு" என்பது வன்றொடர். மொய்ம்பு' என்பது மென்றொடர்.

(3) இடைத்தொடர்க் குற்றியலுகரமும், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரமும் தன் அரை மாத்திரையிலும் குறுகுவதில்லை. வல்லெழுத்து அவற்றின்முன் எல்லாவிடத்தும் மிகுவதுமில்லை.

"இடையொற்றுத் தொடரு மாய்தத் தொடரும்
நடையா யியல வென்மனார் புலவர்"
(தொல் - குற்றியலுகரப் புணரியல்—8.)

உ - ம் "மயில்புல்கு தண்பெடை யோடுடனாடும்வளர் சாரல்" —சம்பந்தர்.

ஏனைய குற்றியலுகரங்களில், நெடிற்றொடர், உயிர்த் தொடர்க் குற்றுகரங்கள் இரண்டிற்கும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கு விதி:—

"ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"
"ஒற்றிடை யினமிகா மொழியுமா றுளவே
யத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே"

(தொல் - குற்றியலுகரப் புணரியல் 6&7)

உதாரணம்:—நெடிற்றொடருக்குப் பின்னர் வல்லெழுத்து மிகாமைக்கு:—

போது தாழ்ந்து புதுமலர் கொண்டுநீர்
மாது தாழ்சடை வைத்த மணாளனார்
ஓது வேதிய னார்திரு வொற்றியூர்
பாத மேத்தப் பறையும் பாவமே

திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை 6.

மற்றும், உயிர்த்தொடர்க்குற்றியலுகரத்திற்கு உதாரணம்:—

தோற்றினா னெயிறு கவ்வித்
தொழிலுடை யரக்கன் றன்னைத்
தேற்றுவான் சென்று சொல்லச்
சிக்கெனத் தவிரு மென்று
வீற்றினை யுடைய னாகி
வெடுவெடுத் தெழுந்த வன்றன்
ஆற்றலை யழிக்க வல்லா
ரவளிவ ணல்லூ ராரே.

திருவவளிவணல்லூர் - திருநேரிசை 1.

(4) எஞ்சிநின்ற வன்றொடர் மென்றொடர்க் குற்றுகரப் புணர்ச்சி விதி.

"வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே [லாம்
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்."

(தொல் - எழு-414)

இதன் பொருள். "வன்றொடர்மொழிக் குற்றுகர ஈறும், மென்றொடர்மொழிக் குற்றுகர ஈறும், வருமொழியாய் வந்த வல்லெழுத்தினது ஒற்று இடையிலே மிக்கு முடியும். அவ்விரண்டனுள் மெல்லொற்றுத் தொடர்மொழிக்கண் நின்ற மெல்லொற் றெல்லாம் இறுதிக்கண்நின்ற வல்லொற்றும் கிளையாகிய வல்லொற்றுமாய் முடியும்.

"இறுதி வல்லொற்று வருவதாவது, குற்றுகரம் ஏறி நின்ற வல்லொற்றுத் தானே முன்னர் வந்து நிற்றலாம். கிளைவல்லொற்று வருதலாவது ண காரத்திற்கு ட காரமும் ன காரத்திற்கு ற காரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாமாதலின், அவை முன்னர் வந்து நிற்றலாம்.

"வந்த என்றதனான் இவ்விரண்டிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. * கொக்கின் கால் † குரங்கின் கால் என வரும்." நச்சினார்க்கினியர்.

(5) குற்றியலுகரம் கெடுவதாய் இருந்தால், அது ஏறிநின்ற வல்லெழுத்துடன் கெடும் ‡ என்பதற்குத் தொல்காப்பியனார் பின்வரும் சந்திகளைக் குறிக்கின்றார். அவையாவன:

(i) "உண்டென் கிளவி யுண்மை செப்பின்
முந்தை யிறுதி மெய்யொடு கெடுதலு
மேனிலை யொற்றே ளகார மாதலு
மாமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து வரூஉங் காலை யான"

உ - ம். உண்டு + பொருள் = உள்பொருள்.

(தொல் - எழு 430)

(ii) திரிபுவேறு கிளப்பி னொற்று முகரமும்
கெடுதல் வேண்டு மென்மனார் புலவர்;
ஒற்றுமெய் திரிந்து னகார மாகுந்
தெற்கொடு புணருங் காலை யான.

(தொல் - எழு. 432)

(உ - ம்) வடக்கு + கரை = வடகரை
தெற்கு + முகம் = தென்முகம்

(iii) ஒன்று முதலாக வெட்ட னிறுதி
யெல்லா வெண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே
முற்றவின் வரூஉ மிரண்டலங் கடையே

(தொல் - எழு 433)

(iv) "ஆயிரம் வரினு மாயிய றிரியாது"

ஷை 434.

(V) "ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்
நின்ற பத்தி னொற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையு மியற்கைத் தென்ப
கூறிய வியற்கை குற்றிய லுகர
மாற னிறுதி யல்வழி யான"

(தொல் - எழு-48)

இவற்றில் குற்றியலுகரம் தான்மாத்திரம் கெடாமல் தான் ஏறிநின்ற மெய்யுடன் கெடுமென்று விளக்குகின்றார்.

(6) சில எண்ணுப் பெயரில் ஈற்றுக்குற்றியலுகரம் மாத்திரம் கெடுவதுண்டு. அவ்வாறு கெடுங்காலத்தில் அது முற்றுகரமாய்க் கெடும்.

"ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்"

(தொல் - குற்றியலுகரப்புணரியல் 64)

என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் "ஆறென்னு

* கொக்கின் தூவலும் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலு நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே.

திருநாரையூர் - திருக்குறுந்தொகை 4.

† குரக்கு என்பதே இயற்சொல். குரங்கெனவருதல் மெலிந்து நிற்றல். நமது சமயகுரவர் மூவரும் "குரக்கு" என்னும் சொற்பிரயோகம் செய்வது தேவாரத்தில் காணலாம்.

(உ - ம்) "குரக்கினம் பயிலுங் கொள்ளம் பூதூர்"-சம்பந்தர்
"குரக்கினங் குதிகொள்ளுங் குரக்குக்கா"-அப்பர்
"குரக்கினங் குதிகொள்ளத் தேனுகக்குண்டு தண்
வயல் கெண்டைபாய்" சுந்தரர்.

‡ "எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
யக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத் தோன்றாது"

(தொல் - புணரியல். 26)



மண்ணின்க ணின்ற குற்றியலுகரம் நெடுமுதல் குறுகி அறுவென முற்றுகரமாய் நிற்றலின், அதுதானேறிய மெய்யாகிய றகரவொற்றுக் கெடாதுநிற்ப முற்றுகரமாகிய ஈறுதான் கெட்டுப் புணர்தலை விரும்பும் ஆசிரியன் என்றவாறு" என உரை கூறுவார்.

(7) குற்றியலுகரம் சந்தியில் 'இன்' சாரியை பெறுவதுண்டு. இதைத் தொகை மரபில்,

"குற்றிய லுகரக் கின்னே சாரியை"

தொல் - எழு 167)

என்றும், உருபியலில்

"குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்று மின்னின் சாரியை

(தொல் எழு - 195)

எனவும் வருவனவற்றைக் குற்றியலுகரப் புணரியல் விதிகளுடன் கூட்டி புணர்க.

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

4-ம் பத்து 8-ம் தசகம்

[228-வது பக்கத் தொடர்ச்சி]

8-ம் பாசுரம்.

வரிவளையாற் குறைவில்லாப்
பெருமுழக்கா லடங்காரை
யெரியழலம் புகவூதி
யிருநிலமுன் துயர்தவிர்த்த
தெரிவரிய சிவன்பிரம
னமரர்கோன் பணிந்தேத்தும்
விரிபுகழான் கவராத
மேகலையாற் குறைவிலமே.

**பதக்குறிப்புக்கள்:**—வரிவளையாற் குறைவில்லா-பகவானுடைய பாஞ்சசந்ய மென்ற சங்கில் ரேகாவிந்நிரஸங்கள் சோபையின்பொருட்டு இருப்பதாகத்திருள்ளம். பெருமுழக்கால் - உலகமெல்லாம் கேட்கும்படியாகக் கிருஷ்ணபகவான் ஊதும் சப்தத்தால், அடங்காரை - துரியோதனாதிகளைப் போன்ற துஷ்டர்களை, எரி அழலம் புக-எரிகின்ற அக்நியானது பிரவேசிக்க. இருநிலம் முன் துயர் தவிர்த்த-பாரதப் போரில உலகத்தின் துயர்களெல்லாம் தீரும்படி நீக்கின, தெரிவரிய-உயர்ந்த லோகாதிகாரிகளோ அல்லது பகவானுக்குள் அடங்கிய சில்லரை அதிகாரிகளோ வெறு தெரிந்துகொள்ளக்கூடாத, பிரமன் சிவன் அமரர்கோன்-நபிரஹ்ம நசிவ நஇந்திர" வென்றுவேதம் படிப்பதுபோல், பணிந்தேத்தும்-இம்மூவரும் தாழ்மையுடன் வணங்கி ஏத்தும் பரம்பொருளாகிய கிருஷ்ணபகவானைப் பாரத யுத்தத்தின் பிறகு விஜயஸ்ரீயுடன் விளங்குபவன் கவராத மேகலையால் குறைவிலம்.

9-ம் பாசுரம்.

மேகலையாற் குறைவில்லா
மெலிவுற்ற வகலல்குற்
போகமகள் புகழ்த்தந்தை
விறல்வாணன் புயந்துணித்து
நாகமிசைத் துயில்வான்போல்
உலகெல்லாம் நன்கொடுங்க
யோகணைவான் கவராத
வுடம்பினாற் குறைவிலமே

**உரை:**—மெலிவுற்ற - இளைத்துப்போன, அகலல்குல் - அகன்ற அல்குல், போகமகள் - கிருஷ்ணபகவானது பேரனாகிய அநிருத்தன் மயக்கம்கொண்டு அநுபவித்த உத்தம ஸ்ரீயாகிய உஷா. விறல்வாணன்-பேர்போன ஆற்றலுடைய வாணாசுரனை தந்தையை, புயம்துணித்து-கைகளைச் சக்கராயுதத்தால் வெட்டிவிட்டு, நாகமிசைத் துயில்வான்போல் - ஆதிசேஷனாகிய படுக்கையில் உறங்குபவன்போல், உலகெல்லாம் நன்கு ஒடுங்க - வாணாசுரன் எந்நிமிஷம் தங்கள் பெண்டீர்களைப் பலாத்காரமாய்க் கவர்ந்துகொள்வானோவென்ற பயம் உலகத்தாருக்கு நீங்க, யோகு அணைவான் - யோகநித்திரை செய்யும் பகவான், கவராத உடம்பினால் குறைவிலம்.

10-ம் பாசுரம்.

உடம்பினாற் குறைவில்லா
வுயிர்பிரிந்த மலைத்துண்டம்
கிடந்தனபோற் றுணிபலவா
வசுரர்குழாந் துணித்துகந்த
தடம்புனலச் சடைமுடியன்
தனிவொருகூ றமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத
வுயிரினாற் குறைவிலம்

**குறிப்பு:**—இப்பாசுரம் இறுதிப் பாசுர மானதால் இப்பிராட்டி உயிர் போனாலும் குறைவு இல்லை என்கிறாள்.

இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் முன் பாசுரங்களில் கூறிய அம்சங்களையே கூறுவது எல்லாவற்றையும் சங்கரகமாக எடுத்துரைத்தல் நிமித்தம்.

பகவான் லோகோபகாரக நிமித்தம் அசுரர்கூட்டங்களை மலைமலையாகக்கொன்று உவகை அளிக்கின்றாரென்பது இரண்டாவதடியின் கருத்து.

**பொழிப்புரை:**—மாம்சங்களால் நன்றாய்ப் பருத்து உலகை யழிக்கும் அசுரர்களின் கூட்டத்தை வெட்டிப்போட்டு நிர்ப்பயனாயும் நிர்ப்பரனாயும் ஆகி எல்லா உலகமும் தன் சங்கல்பத்திலே அடங்கும்படி செய்வான் தான் கங்காதரஸ்வாமிக்குத் தன் உடம்பில் இடம் கொடுத்ததுபோல் என்னோடு கலந்த கலவியாலே என்நெஞ்சத்தை அபஹரித்தவன் இப்போழ்து கவராத என் ஆத்மா எனக்கு இல்லாமை அமையும், அது போனதால் குறைவிலம்.

11-ம் பாசுரம்.

உயிரினாற் குறைவில்லா
உலகேழ்தன் னுள்ளொடுக்கித்
தயிர்வெண்ணெய் உண்டானைத்
தடங்குருகூர்ச் சடகோபன்
செயிரில்சொல் லிசைமாலை
யாயிரத்து ளிப்பத்தால்

வயிரம்சேர் பிறப்பறுத்து
வைகுந்தம் நண்ணுவரே

பதக்குறிப்புக்கள்:—ஒடுக்கி-பிரளய காலத்தில் தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்து, வெண்ணெய் உண்டானை-இடைச்சேரியில் கோபாலர் வெண்ணெயைச் சுலபமாய்க் கலந்து உண்டவனை, செயிர் - கேடு, இல் - இல்லாத, வயிரம் சேர் - அநாதிகால முதலாய்க் கர்மங்கள் வருவதால் அவைகளை ஒழிக்க முடியாமல் ஜந்மங்கள் எடுக்கும் சம்சார பிரளயத்தில் ஸர்வலோக பாலனைப் எல்லா உலகங்களையும் தன் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்து மனுஷியனைப் பிறந்து ஸர்வ சுலபனைப் இடையர்களோடும் ஒத்து வாழ்ந்த எம்பெருமானைத் தவறில்லாமல் பாடிய இத்திருவாய்மொழியை அப்பியஸிப்பவர் சமஸ்த பிரதிபந்தங்களையும் களைந்து வைகுந்தம் ஏறுவார்கள்.

# வாலி வதை

[229-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னும்சிலர், பிராட்டியிருக்குமிடத்தை நாடி இராவணனைச் சம்ஹரிப்பதற்குச் சுக்ரீவனை உற்ற துணையாகக் கொள்ளநினைத்து ஸ்வகாரியதுரந்தரனாய் (political expediency) ஆக வாலியை ஸ்ரீ ராகவன் காலவிளம்பமாகும் போரைத் தவிர்த்து அவசரமாய் மறைந்துநின்று கொன்றான் என்பர். "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன்" என்று மகாவீரனும் வாலியும்ஆழங்கால்படும்படியன்றே இவன் வீரமிருப்பது. பிராட்டியைத் தேடுவதற்குச் சுக்ரீவ சக்யம் ஒரு வியாஜமே என்று பொருள்படும்படியாய்த், "தனுவொன் றுலே மின்னைக்கண் டனையா டன்னை நாடுதல் விலக்கற் பாற்றே" என்று இளையபெருமாளும் கூறுநிற்பன். இது ஒருபக்கமிருக்க, சுக்ரீவனைத் தவிர்த்துத் தமையனைத் துணைக்கோடப் பிரபு துணிந்தானென்றால் வாலி இராமன் ஆணையைச் சிரமேற்கொண்டு மாயவரக்கனை வாலிற்பற்றி நிரசனம் செய்து பிராட்டியை ஸ்ரீ ராகவன் திருவடிகளிலே சமர்ப்பித் திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. இராமகாரியம் செய்யப் பாக்கியஹீனனாய்ப் போன தன்மைக்கு வாலி விசனிக்கின்றான். தாரையும் இவ்விபரத்தை "இராமனென்றுளான், வாயால்வயினன் என்னின் வாழ்வெலாம் ஈயாயோ, அமிழ்தேயு மீகுவாய்" என்று மிகவும் உருக்கமாய்ச் சுட்டிக் காட்டிக் கதறுகின்றாள். ஆகவே ஸ்வகாரிய துரந்தரனாய் (political expediency)ஐ உத்தேசித்து நின்றானென்றால் வாலியின் ஸ்நேகத்தைப் பெருமாள் சர்வ சுலபமாய்ப் பெற்றிருத்தல் கூடுமென்று ஏற்படுகிறது.

"புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ"

என்று வாலியாற் காட்டப்பட்ட "short sighted policy, என்னும் தோஷத்திற்குள்ளாகான். இதைவிட்டு யாவரும் பரிதவிக்கத்தக்க விதமாய் வாலியால் அடிபட்டு ஒளிந்து வாழ்ந்துநின்ற சுக்ரீவனைக் கைப்பற்றியதொன்றுமே அவன்பால் "time server" என்ற குற்றங்கூற இடங்கொடாதென்று ஏற்படுகின்றது.

ஆனால்,

"கிட்டினர் பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வரம் பாக மெய்துவான்"

என்றபடி வாலி வரம்பெற்ற காரணத்தினால்தான் அவனுடன் நேர்ப்படாது பிரபுவும் மறைந்துநின்று கொன்றான் என்பர். இவ் வானர வீரன் இவ்வரம் படைத்ததாக ஸ்ரீ வால்மீகநாதன் ஓரிடத்திலும் கூறினாரல்லர்.

வியக்தியைக் குறிப்பிடாது சுக்ரீவன் பக்கபலத்துடன் யுத்தத்திற்குச் சன்னத்தனாய் நின்று வலிந்து அறைகூவுகிற விபரம் சொல்லி அவனுடன் "யுத்தம் செய்யற்க," என்று தாரை வாலியைத் தடுக்கவும் எற்கெனவே அவள் தெரிந்துள்ள தன் வீரசூர பராக்கிரமங்களைப் பரக்கப்பேசி அசாதாரணமான இம் மகாவரம் தான் பெற்றிருக்கும் வாய்மையையும் சொல்லித் தன் உயிர்த்துணையைத் தேற்றுகின்றான் வாலி. அதிலும் தேறுதவளாய்,

"அன்னது கேட்டவ ளரச வாயவற்
கின்னுயிர் நட்பமைந் திராம னென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய வன்பினர் சொல்லி னாரென்றாள்"

என்னும்படி வியக்தியை ஸ்ரீ ராகவன் என்று குறிப்பிட்டு அவ்வீரனும் வாலியின் உயிர் கோடலில் திருஷ்டி வைத்தவனாய்த் துணைநின்று இங்கே எழுந்தருளியுள்ளான் என்று கூறிக் கலங்கிப் பதறினாள். இதற்கு வாலியும் பெருமாள் வைபவத்தைப் பிரஸம்ஸித்துப் போற்றி வானராளுக்குள் ஏற்பட்ட கக்ஷியில் இறங்கான் என்று உறுதிகூறினானே யன்றித் தான் பெற்ற வரத்தின் வல்லமையால் அப்பெருமாள் எதிர்ப்பட்டாலும் அவன் வரபலத்தில் பாதி தனக்கு வந்துவிடும் என்று மார்தட்டவில்லை. இவ்விஷயம் நன்றாய்க் கவனிக்கற்பாலது. (The omission is significant.) வியக்தி பேதமின்றி எதிரியாய்வரும் எல்லாச் சத்துருக்களின் வரபலங்களிற் பாதி வாலியைச் சேருமென்றால் ஸ்ரீ ராகவன் விஷயத்திலும் இது பொருந்தலாமே. அவ்விதமாயின் இவ்வுயரிய நல்வர விபரம் கேட்ட பின்னரும் தாரை பக்கபலமாய் வந்தவன் "ஸ்ரீ ராமன்" என்று குறிப்பிட்டுச் சொல்லக் காரணங் காணேம். ஆகவே அவ்வரம் பெருமாள்பால் பலிக்குமோ என்ற சந்தேகம் இப் புண்யவதியின் மனதிற் பட்டதுபோலும். இவ்வரவுண்மையால் ஏனையர்களுக் கொப்பந்தம் ஸ்ரீ ராகவனும் தன்னால் ஜெயிக்கப்படுவான் என்று வாலி துணிந்தால் தன் திருமேனிக்கு ரகுவீரனால் அபாயம் வருவதாகப் பயந்த தாரையிடம் இதை முதலிலே போட்டுச்சொல்லித்தைரியப்படுத்தமுயல்வானன்றோ. தவிரவும் இருவர்களுக்குள் சவிஸ்தாரமாய் நடந்த விவாதத்தில் மறைந்து நின்று பாணப் பிரயோகஞ் செய்ததோஷத்தைக் குறிப்பிட்ட விடங்களிலெல்லாம் பெருமாள் இவ்வர விபரம் தெரிந்து தன் வரத்தில் பாதிஇவனைச்சேருமென்று கருதிஒளித்துநின்றெய்ததாக வாலி எடுத்துக்காட்டினானல்லன். மறைந்துநின்று பாணப்பிரயோகம் செய்யப்பெறானெனின்ஸ்ரீராகவன் தன்னால் தோல்வியுற்றிருப்பான் என்று சொல்லவும் வாலி துணியவில்லை. தொனிப்பொருளாகக் கொள்வோமெனின் ஓரிடத்திலும் இவர்களுடைய வீரத்தின் தாரதம்மியம் வாலியாற் குறிப்பிடப்படவில்லது. ஸ்ரீ ராகவனும் தன்னைக் கொல்ல வல்ல ஆற்றல் (Prowess) படைத்தவனே என்று வாலியும் உட்கொண்டு சம்பாஷிப்பதாகவே பாசுரங்கள் அமைந்து கிடக்கின்றன. தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமாய் மறைந்துநின்று பாணப்பிரயோகம் செய்த தோஷத்தையே வற்புறுத்தத் துவக்கினானேயன்றி வேறன்று. இவன் தர்ம பத்தினியாம் தாரையும் "ஓயாவாளியொளித்து நின்றெய்ததை" அதரும வழியின்பாற் பட்டதென்று முறையிட்டனளேயன்றி இவ்வரம் பற்றி ஸ்ரீ ராகவன் வாலியால் ஜயிக்கப்பட்டிருத்தல் கூடுமென்று கொள்ளவில்லை. தவிரவும் இவ்வரவிபரங் கேட்ட பின்னரன்றோ பெருமாளும்

"உகை மேழினோ டேழும்வந்
தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லுடை
வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றாமு
முனக்கின்று தருவேன்"

என்று சூளுற்றது. வாலி பெற்ற இம்மகாவரம் ஒருபுறமிருக்க, பதினன்கு உலகங்களும் சேர்ந்து இவன் உயிரைத்தப்புவிப்பதற்காகச் சகாயமாய்வரினும் என் கோதண்டத்தின் பாணத்தினால் கொல்வேன் என்று கூறினனாகை, வாலி கொண்ட இவ்வரத்தை ஒரு பொருட்டாக மதித்தானல்லன் என்று பெறும்படி கிடக்கிறது இப்பாசுரம். அவ்வரம் தன்னை ஒருவிதத்திலும் அசைக்கமாட்டாது என்று பிரபு நிச்சயித்தான் போலும். இப்பாசுரத்தை அடியொற்றியே, தாரையிடம் வாலி பெருமாளைப்பற்றிக் கூறும் பாசுரமும் அமைந்துகிடப்பது கவனிக்கற்பாலது.

"நின்றபே ருலகெலாம் நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன்றனை யொருவருந் தன்னில் வேறிலான்"

பதினன்குலோகங்களும் நெருக்கி எதிர்த்து வரினும் வெற்றிக்கொடி வீசிய கோதண்டம் ஒன்றையுமே கொண்டு ஜயிக்கவல்ல ஒப்பாரை யிலையாய அசஹாய சூரனும் இராமனுக்கு வேறொரு துணையும் வேண்டுமோ" என்று அவன் வீரத்தை வாலி மெச்சிக்கொண்டாடுகிறான். வீரர்கள் அகப்படுவது வீரத்திலே. இதுவும், தான் கொண்ட வரம் ரகுவீரன் திறத்தில் பலிக்காது என்ற உட்கருத்தை வெளியிட்டதோ என்று நினைக்கும்படி யிருக்கிறது. வியவஹார ரீதிக்காக இவ்வரம் ஸ்ரீ இராமனையும் கட்டுப்படுத்தக்கூடியதென்று வைத்துக்கொண்டாலும் அவ் வானர வீரனுடன் பெருமாள் பொரக்கிட்டினால் மட்டும் வாலிக்குப் பலன்படுமேயன்றி வேறன்று.

"கிட்டினர் பொரக் கிடைக்கின்"

போதைய ரெதிர்குவர் எனினும் பெற்றுடை
ஊதிய வரங்களு மூமு முள்ளதிற்
பாதியு மென்னதாற் பகைப்பதேங்ஙனம்"

என்றே பிரயோகம். பொர நினையாத விடங்களில் இவ்வரம் இவனுக்குப் பலன்தரு மியல்பினதன்று. "The gist of the boon is, to approach Vali with the intention to fight and nothing more வாலியுடன் யுத்தஞ் செய்வதாக நினைத்து அவன் அநுஷ்டானம் செய்துநின்ற தென் சமுத்திரக்கரையில் சேர்ந்து இரவு பார்த்து மறைந்து நின்று இவனைக் கட்ட எத்தனித்தவிடத்தும், பொர நினைந்த காரணத்தினால் மட்டும் ராவணன் வரபலங்களிற் பாதி வாலியைச் சேர்ந்ததுஎன்று கவியும் காட்டியுள்ளார்.

"இரங்கியா னிற்பவென் வலியவன் வயினெய்த
வரங்கொள் வாலிபாற் றோற்றனம்"

என்பது இராவணன் வார்த்தை. ஆகவே "பொர நினைந்து" இராமன் மறைந்துநின்றான் என்றால் இவன் வரபலங்களிற் பாதி வாலியைச் சேரவேண்டிய நியமமுண்டு. அதை நாம் கண்டோமில்லை எனவே ஸ்ரீ ராகவன் வாலியுடன் பொர நினைந்தவனல்லன் என்பதும் மறைந்துநின் றெய்தது யுத்தத்திலன்று என்றும் நாம் முன்கொண்ட கொள்கையை இந்தப் பாவமும் வலியுறுத்தாநிற்கும். வாலி உனக்கு நான் பகையன்று என்றான். அதுவே பெருமாள் பக்ஷமும். இவனைப் பகையாக்கிப் பொரநினைந்து கொல்லவில்லை. மகா பாபி என்று கொண்டு ஸம்ஹரித்தபடி. மரணதண்டனைக் குரியானை அத்தண்டனை விதிக்கும் ராஜனும் நியாயாதிபதியும் அவனுடன் பகைகொண்டு சத்துருபக்ஷத்தில் நிறுத்தித் தங்கள் ஆக்ஞையை நிறைவேற்றுகிறார்கள் என்று கொள்ளல் ஒருவிதத்திலும் பொருந்தாது. உய்த்துணர்ந்துழி வாலிவதை சக்கிரவர்த்தி திருமகன் இட்டுப்பிறந்த துஷ்ட நிக்கரகத்தின்பாற் படுமேயன்றி வேறன்று. அவ்விதம் பிரபு கைக்கொண்ட துஷ்கிருத் விநாசத்திற்கு இவ்வரம் தடை செய்யாதென்பதும் வெளிப்படை.

ஆனால் யுத்தகாண்டத்தில் மந்திரப் படலத்தில் ராவணன் கூற்றாக

"நீல கண்டனும் நேமியு நேர்நின்று நேரின்
ஏனு மன்னவ ருடைவலி யவன்வயி னெய்தும்
சானு நல்வர நினைந்தவ னெதிர்செலத் தவிர்ந்து
வாலிதன்னையுமனித்தனு மறைந்துநின் றெய்தான்"

என்ற பாசுரம் பார்க்கிறோமே யெனின், விபீஷணனும் வான் மந்திரத்தில் வாலிபால் தமையன் தோற்றதைக் குறிப்பிட்டனனாக, அதற்கு உத்தரம் கூறவந்த ராவணன் வாலி படைத்த இவ்வரத்தின் காரணமாகத் தான் தோற்றதைக் கூறி ஒரு ஆதரவாக (corroboration) பெருமாள் மறைந்து நின்றெய்ததைச் சுட்டிய ஒரு சத்துருவின் வார்த்தையென்று தள்ளல் வேண்டும்.

"ஊனவில்லிறுத்து ஓட்டை மாமரத்து ளம்போட்டி"

என்றல்லவோ இவன் சத்தியம் பிறழ்ந்து கூறுவது. இவன்றானே ராவணன் வதைப்படலத்தில் ஸ்ரீ ராகவன் ஆற்றலுக்கு வியந்து

"சிவனோ வல்லன் நான்முக னல்லன் திருமாலாம்
அவனோ வல்லன் மெய்வர மெல்லா மடுகின்றான்
தவனோ வென்னிற் செய்துமுடிக்குந் தரனல்லன்
இவனோ தானவ் வேதமுதற் காரண னென்றான்"

என்று பெருமாளைப் பற்றிய வாஸ்தவ தத்துவத்தை மிகுந்த ஆதரத்துடன் வெளியிடுகிறான். "வேதவேத்யேபரே பும்ஸிஜாதே தசரதாத்மஜே" என்ற ஸ்காந்த புராண வசனத்தின் கருத்தை இப்பாசுரம் தழுவி நிற்பது கவனிக்கற்பாலது. வேதவேத்யனை பரம்பொருளே சாது பரித்திராண துஷ்கிருத் விநாசத்திற்காக ஸ்ரீராகவனாய் அவதாரஞ் செய்தருளினான் என்

18946

றதை இவன் முன்னரே உணர்ந்திருந்தால் அப்பெருமானைப்பற்றிய வசைவார்த்தைகளைக் கூற முன்னுக்கு வந்திருக்கமாட்டான் என்று நிச்சயமாகக் கொள்ளலாம். ஏனையர்கள் திறத்தில் தவருது கொல்லவல்ல ஸ்ரீ நாராயணாஸ்திரமும் இளையபெருமாள் சன்னிதியில் ஒன்றும் செய்யமாட்டாது பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணி விலகின விபரத்திற்கு இந்திரஜித்தே சான்று பகருகிறான்.

"நிலஞ்செய்து விசும்புஞ் செய்து
நெடியவன் படைநின் றூனை
வலஞ்செய்து போவ தானல்
மற்றினி வலிய துண்டே"

என்ற இதைக் கவனிக்குமிடத்து வாலிபெற்ற இம் மகாவரம் ஸ்ரீ சக்கிரவர்த்தி திருமகன் திறத்தில் பலிக்காது நிற்பதும் அசம்பாவிதமன்றே.

இக்கருத்தை உட்கொண்டே வாலியும் பரமபதம் செல்லும் தறுவாயில் இதுகாறும் பரக்கப்பேசிய மகாவரம் உள்பட வரங்கள் எல்லாம் ராமபாணத்திற்குமுன் விளக்கின்முன் னிருளுண்டாமோ என்ற கணக்கில் பஸ்மீகரிக்கப்பட்டு நின்ற நிலைமையைப் போற்றி விஸ்மிதனுகிறான்.

புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலாம் உருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே

என்ற பாசுரமிட்டு, "பொய்தீர்
மாதவஞ் சார்ந்த தீரா வரங்களு மற்று முற்றும்
யாதவ னினைந்தா னன்ன பயத்தன"

என்பது எழுதா மறையின் முடிபாதலின் இந்தக் காரணங்களினுல் வாலிபெற்றஇவ்வரம் காரணமாகப் பெருமாள் மறைந்து நின்று கொன்றுன் என்று கொள்வது ஒருவிதத்திலும் பொருந்தாதென்று சொல்லி முடிக்க.

ஆனுல் மரணதண்டனையை மறைந்துநின்று நிறைவேற்றிய ஸ்ரீ ராகவனது உட்கருத்து யாது என்று சிலர் கேட்கலாம். ஆங்கிலேய நாட்டுப் புலவர்களுள் அதுலியரான ஷேக்ஸ்பியர் என்னும் மகாகவி எழுதியுள்ள நாடகங்களில் பாபியாகத் தோன்றுமவன் (Vice) சிலகாலம் இவ்வுலகில் தலைதூக்கி நின்று மிகுந்த சந்துஷ்டியுடன் சமஸ்த ஐசுவரியங்களையும் அனுபவித்துத் திகழினும், அவன் இறுதி நிலைஎன்று சொப்பனுவஸ்தையிலும் அவன் எதிர்பாராது நிற்கும் சமயம் எதிர்பாராத இடங்களிலிருந்து சம்பவிக்கிறதாகக் காட்டியுள்ளார். நம் தர்மசாஸ்திரங்களும் இக்கொள்கையை உடன்பாடாகக் கொண்டிறந்துள்ளன.

இதை யனுசரித்துத்தான் வாலியின் இறுதியும் நேர்ந்தது என்று ஊகித்தறிதல் நேர். ஆனுல் அவனுக்கு மரண தண்டனையைப் பெருமாள் நிறைவேற்றிய பாகம் மிகவும் கருணையுடன் கூடியதென்று சொல்லத் தட்டில்லை. Justice tempered with Mercy குற்றங்களுக்கேற்ற பலப்பிரகாரமாக அமைந்துள்ள சித்திரவதைக்கு அவனை உட்படுத்தாது, கதலியின் கனியில் ஊசி நுழைந்தாலொப்பக் கூர்மையான பாணப்பிரயோகம் செய்து பிரபு சம்ஹரித்தருளினுன். அம்மட்டோ, தன் பவித்திரமான பாணம் அவன் மார்பில் பிரவேசித்தது காரணமாக "கைதவமியற்றி யாண்டுங் கழிப்பருங் கணக்கில் தீமை வைகலும் புரிந்துளான்" என்று சொல்லக்கிடந்த இவ்வானர வீரனின் மகாபாபங்களை அறவே ஒழித்துப் பிராணன்போகுந் தறுவாயில் பரதேவதா பாரமார்த்திக ஞானம் அவனுக்குத் தலைக்கட்டிவைத்துப் பரம் பொருளாந் தன்னை உணர்வுடன் ஸேவித்துப் பரமபதமும் கைவல்யமாகும்படிக்கும் அநுக்கிரகித்தருளினுன், "பற்றி நீந்தவரிய நெடுங்கருணைக்கெல்லாம் நிலயமாம்" கோசலநாடுடை வள்ளல். இந்த நிர்ஹேதுக கடாக்ஷத்திலே ஆழங்கால் பட்டவனுய் இப் பரமோபகாரத்தை ஸ்மரித்து வாலியும்

"ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினுய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாபம்நீ தருமம்நீ பகையுநீ யுறவுநீ"

என்று பெருமாளை மங்களா சாசனம் செய்து கிருதார்த்தனுகிறான்.

ஆகவே மரணதண்டனைக் குரிய கொடிய பாபங்களைச் செய்து வாலி outlaw என்னும்படி நின்றனுக, தண்டதானுகிய ஸ்ரீ ராகவன் இவனுக்கு அத்தண்டனையை விதித்து அதைத் தானே நின்று நிறைவேற்றினுன் என்பதும், இவனுடன் நிகழ்ந்தது போரன்று என்பதும், இவனைச் சம்ஹரித்தது யுத்தகளத்திலல்லாது கொலைக்களத்திலேதான் என்பதும், யுத்தத்திற்குரிய தர்மசாஸ்திரங்கள் கொண்டு பிரபுவின் செய்கையை ஆராய்ச்சி செய்தல் ஒருவிதத்திலும் ஒழுங்கன்று என்பதும், மறைந்து நின்று பாணம் எவியதும் இவன் பெற்ற அஸாதாரண வரத்தின் காரணமாகவன்று என்பதும், மரண தண்டனையை நிறைவேற்றியது மறைந்த நின்ருகிலும் அதுவும் குற்றத்தின்பாற் படாதென்பதும், அத்தண்டனையைப்பாணப்பிரயோகம்செய்து நிறைவேற்றியதன் காரணமாக இம் மகாவீரனது பாபங்களை அறவே ஒழிந்து,அவனுக்கு வானுயர் நிலையாம் ஸ்ரீவைகுண்டத்தையும் பெருமாள் தலைக்கட்டி வைத்தருளினுன் என்பதும், வாலிவதத்திளுல் திரண்ட பொருள் என்று கூறி இவ்வாராய்ச்சியை முடிப்பாம்.


## ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0




# தமிழ்ப் பாடம் 63.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[236-வது பக்கத் தொடர்ச்சி]

குதிரையின் உளம் அறிந்து ஓட்டும் அசுவஹிருதய வித்தையை வாகுகன் காட்ட, அதனைக் கற்பதற்கு அவாவிய இருதுபன்னன் தானும் அக்ஷஹிருதய வித்தை என்னுமொரு கணிதவித்தையைக் காட்டி, இவ்விரண்டு வித்தைகளையும் ஒருவருக்கு ஒருவர் போதித்தனர். அதற்குள் தேரும் விதர்ப்ப நாடு வந்து சேர்ந்தது. கலியும் நளனைவிட்டு நீங்கினுன்.

---

இத்தாழ் பணையி லிருந்தான்றிக் காயெண்ணின்
பத்தா யிரங்கோடி பாரென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி யெண்ணினுன் றேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் றுன். 47.

**பதப்பிரிவு:**—இ தாழ் பணையில் இருமை தான்றி காய் எண்ணின் பத்து ஆயிரம் கோடி பார் என்ன உய்த்து அதனில் தேர் நிறுத்தி எண்ணினுன் தேவர் சபை நடுவே தார் நிறுத்தும் தோள் வேந்தன்தான்.

**அன்வயம்:**—(இருதுபன்னன்) "இத் தாழ்பணையில் இரும்தான்றிக் காய் எண்ணின் (அவை) பத்து ஆயிரம் கோடி, பார்," என்ன, தேவர் சபைநடுவே தார்நிறுத்தும் தோள்வேந்தன்தான் அதனில், தேர் உய்த்து நிறுத்தி எண்ணினுன்.

### பதவுரை

"இ - இந்த
தாழ் - பள்ளமான
பணையில் - வயலிலுள்ள
இரு - பெரிய
தான்றி - தான்றி மரத்திலுள்ள
காய் - காய்களை
எண்ணின் - கணக்கிட்டால் (அவை)
பத்து ஆயிரம் கோடி - பதினுயிரங் கோடி காய்கள் ஆகும்
பார் - எண்ணிப்பார்த்துச் சோதித்துக்கொள்"
என்ன - என்று (இருதுபன்னன்) கூற
தேவர் - தேவர்கள் வந்திருந்த
சபை - (சுயம்வர) சபையின்
நடுவே - மத்தியில்
தார் - (தமயந்தியின் சுயம்வர) மாலையை
நிறுத்தும் - நிலைபெற ஏற்றுக்கொண்ட
தோள் - தோள்களையுடைய
வேந்தன்தான் - வேந்தனுகிய நளன்,
அதனில் - அவ்வயலின்கண்
தேர் - தேரை
உய்த்து - செலுத்தி
நிறுத்தி - நிறுத்தி
எண்ணினுன் - தான்றிக் காய்களை எண்ணிப் பார்த்தான்.

**விரிவுரை:**—பதினுயிரங் கோடியை எண்ணுவதென்ருல் எத்தனை வருடங்களாகுமென்று நினைக்கின்றீர்கள். நிமிடத்திற்கு நூறு காய்கள் வீதம் வாகுகன் எண்ணினுன் என்று வைத்துக்கொள்வோம். ஆயின் பதினுயிரங்கோடி எண்ணிப் பார்ப்பதற்கு 1904 வருஷம், 10 மாதம், 17 நாள், 18 மணி, 4 நிமிடங்களாகும். இப்படி நூற்றுண்டுக் கணக்காய்த் தான்றி மரக் காய்களை எண்ணிக்கொண்டிருந்தால், நாளை அளவு நிற்கின்ற சுயம்வரத்திற்கு என்றுபோய்ச் சேர்வதோ. ஒரு ஆயிரவருஷம் எண்ணிவருகையில் எண்ணின காய்களையே எண்ணுகின்ருேமோ என்ற சந்தேகம் இடையே வந்து கணக்குக் கலையுமானுல், மறுபடியும் அடியைப் பிடித்து ஆரம்பிக்கவேண்டியதுதானே. இருதுபன்னன்தான் மந்திரத்தால் சொல்லினுன். அம்மந்திரந் தெரியாதவர்கள் அதன் நேர்மையைச் சோதித்து அறியவும் இயலாது. இன்னவிதம் யுகமே மாறக்கூடிய காலாந்தரங்களை ஒருநொடி அளவிற்குள் அடக்கக்கூடிய துணிவு புலவர்களுக்கே உரியது.

பொய்யோ மெய்யோ, எம்மனோர் சிந்தனைக்கு எட்டுமோ எட்டாதோ, நளனே எண்ணிப்பார்த்து இருதுபன்னன் சொல்லிய கணக்கினது நேர்மையைத் தேர்ந்து வியந்துநின்ருன். அசுவமந்திரத்தை அவனிடம் கேட்டுக் கற்பதற்கு அதுவே ஏற்றசமயம் என அயோத்திமன்னனுந் துணிந்தனன்.

---

ஏரடிப்பார் கோலெடுப்ப வின்றேன் றொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடனுடன்—தேரடுத்த
மாத்தொழிலு மித்தொழிலு மாற்றுதுமா லென்று
[ரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து. 48.

**பதப்பிரிவு:**—ஏர் அடிப்பார் கோல் எடுப்ப இன் தேன் தொடை பீறு இ கார் அடுத்த சோலை கடல் நாடன் தேர் அடுத்த மா தொழிலும் இ தொழிலும் மாற்றுதும் ஆல் என்று உரைத்தான் தேர் தொழிலின் மிக்கானை தேர்ந்து.

### பதவுரை

ஏர் - உழுகின்ற எருதுகளை
அடிப்பார் - ஓட்டுகின்றவர்
கோல் - கோலை
எடுப்ப - ஓங்க (அந்தக் கோல்)
இன் - இனிய
தேன் - தேனினது
தொடை - கூண்டை
பீறு -கிழிப்பதாகின்ற
கார் - மேகத்தை
அடுத்த - அளாவிய
சோலை - சோலைகளால் சூழப்பட்ட
இ - இந்த [டாசனுகிய இருதுபன்னன்
கடல்நாடன் - கடற்கரையுடைய கோசல நாட்
"தேர் - தேரை
அடுத்த - சேர்ந்த
மா - குதிரைகளை மந்திரத்தால் ஓட்டும்
தொழிலும் - உன்னுடைய தொழிலையும்
இ - இந்தக் கணக்கு
தொழிலும் - தொழிலையும்
மாற்றுதும் - மாற்றிக்கொள்வோம்"
என்று - என்று
தேர் - தேர்ஓட்டும்
தொழிலில் - தொழிலில்

மிக்கானை - வல்லவனாகிய நளனைக் கேட்டு
தேர்ந்து - அவன் இஷ்டத்தைத் தெரிந்து [கொண்டு
உரைத்தான் - தன் அக்ஷஹிருதய மந்திரத்தைச் சொல்லினன்.

---

வண்டார்வளவயல்சூழ் மள்ளுவநாட்டேங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்குற்றான்
காவலன்பா னின்ற கலி. 49.

**பதப்பிரிவு:**—வண்டு ஆர் வளமை வயல் சூழ் மள்ளுவ நாட்டு எம் கோமான் தண் தார் புனை சந்திரன் சுவர்க்கி கொண்டாடும் பாவலன்பால் நின்ற பசிபோல நீங்குற்றான் காவலன்பால் நின்ற கலி.

**பதவுரை**

காவலன்பால் - நளனிடத்தில்
நின்ற - சேர்ந்திருந்த
கலி - கலிபுருடன்,
வண்டு - வண்டுகள்
ஆர் - நிறைந்த
வள - வளமைமிகுந்த
வயல் - வயல்கள்
சூழ் - சூழ்ந்த
மள்ளுவநாட்டு - வள்ளுவநாட்டை ஆள்கின்ற
எம் - எம்முடைய
கோமான் - அரசனாகிய
சந்திரன்சுவர்க்கி-சந்திரன்சுவர்க்கி யென்பவன்
கொண்டாடும் - பாராட்டுகின்ற
பாவலன்பால் - புலவனிடத்தில்
நின்ற - இருந்த
பசிபோல-கரித்திரம் அகன்றுவிடுவதைப்போல
நீங்குற்றான்-(அறவே விரைவில்) நீங்கிவிட்டான்

**விளக்கம்:**—கலி—பசிபோல்—நீங்குற்றான், என்று கூட்டி முடித்துக்கொள்ளவேண்டும்.

**விரிவுரை:**--புகழேந்திப்புலவர் இந்தச் செய்யுளில், தன்னை ஆதரித்த வள்ளலாகிய சந்திரன் சுவர்க்கியைப் போற்றுகின்றார். எள்ளளவேனும் தங்காமல் விரைவின் அகன்று திரும்பியும் வராமல் நளனைவிட்டுக் கலி தீர்வதற்கு உவமையாக, இலன் என்னும் எவ்வம் உரையாமல் ஈயும் குலவள்ளல் சந்திரன்சுவர்க்கியைச் சேர்ந்த பாவலர்களது பசியை எடுத்துக்கூறிய இது புகழேந்தியின் பெருந்தன்மையை விளக்குகின்றது. இவ்விதம் கம்பர் வில்லிபுத்தூரார் அனைய மற்றப் புலவர்களும் தம்மை ஆதரித்த வள்ளல்களைத் தம்நூல்களுள்ளே உவமை நலத்தினுல் செருகிப் புகழ்கின்ற வழக்கமுண்டு. இவ்விடயங்களை ஸ்ரீமான். T. N. சேஷாசலஐயர் தம் கம்பராமாயணக் கட்டுரையொன்றில் (வால்யூம். 1. பக்கம் 813) ஆராய்ந்திருக்கின்றனர். அதனில் புகழேந்தியின் இதுபோன்ற மற்றச் செய்யுள்களையும் தொகுத்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் அக்கட்டுரையை எடுத்து ஒருமுறை படித்துக் கொள்ளல் நலமாம்.

"சந்திரன்சுவர்க்கி கொண்டாடும் பாவலர்" என்னும் தொடரைச் சந்திரன்சுவர்க்கி கொண்டாடுகின்ற பாவலர் என்று எழுவாய்த்தொடராகவும், சந்திரன் சுவர்க்கியைக் கொண்டாடும் பாவலர், என்று இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவுங் கொள்ளலாம். முன்னதன்படி சந்திரன்சுவர்க்கி தானே மதித்துப் பாவலர்களுக்கு உதவுகின்றான் என்ற பொருள் எய்தும். பின்னதன்படி தன்னைப் புகழ்ந்து பாடியவர்களுக்கே அவன் உதவுகின்றான் என்று எண்ண வேண்டும். இவ்விரண்டினில் முதல் அர்த்தமே அவனுக்குப் பெருமையை அதிகம் அளிக்குமாகையால் அதனையே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

---

## இலக்கணம்

இதுவரையில் நடந்த இலக்கணப் பாடங்களையெல்லாம் நமது வாசகர் தொடர்ச்சியாக இப்பொழுது ஒருமுறை படித்து நினைவுபடுத்திக்கொள்ளல் தக்கதாம். பெயர்ச் சொற்களையும் அவைகளின் வேற்றுமையையும் பற்றிக் கூறியனயாவும் நினைவிலிருக்க வேண்டியது இனிவரும் இலக்கணப் பாடங்களுக்கு மிகவும் அவசியம். அவ்வாறே வினைச் சொற்களில், குறிப்பு தெரிநிலை, ஏவல் வியங்கோள் முற்று எச்சம் வினையாலணையும் பெயர் முதலிய பாகுபாடுகளையும் மறத்தல் கூடாது.

ஏனெனில், இப்பொழுது சொற்றொடர் இலக்கணம் ஆரம்பிக்கப்போகின்றோம். இத்தொடர்இலக்கணத்தைக் கற்பதற்கு வேண்டிய அளவுதான் நாம் இதுவரையில் சொல்லிலக்கணத்தில் வற்புறுத்திக் கொண்டு வந்துளோம். சொற்றொடர் இலக்கணம் மிகவும் முக்கியமானது. இது நன்றாகத் தெரியாமற்போனால், எழுத்துக்கள் புணர்கின்ற புணரிலக்கணத்தைக் கற்கவே முடியாது. தமிழைப் பிழையில்லாமல் எழுதுவதற்கும் செய்யுள்களைப் பதம்பிரித்துப் பொருள் தெரிந்துகொள்வதற்கும் புணரிலக்கணத் தேர்ச்சியில்லாமல் தீராது. அப்புணரிலக்கணத்திற்கு வேண்டிய எழுத்திலக்கணமும் சென்ற சில பாடங்களில் சொல்லி வைத்துள்ளோம். தொடரிலக்கணமுங் கற்றுவிட்டால் புணரிலக்கணத்திற்குப் போகலாம். புணரிலக்கணம் முடிவதுடன் ஐந்திலக்கணங்களில் எழுத்து சொல் என்ற இரண்டு இலக்கணங்களிலும், செய்யுள்களைப் பொருள் செய்து கொள்வதற்கு வேண்டிய அளவு கற்றுக்கொண்டதாகும். அணியிலக்கணம் அனேகமாய் நளவெண்பாவைச் சார்ந்தே சொல்லித் தந்துளோம். முக்கியமான அணிகளினுடைய தன்மை யெல்லாம் இப்பாடங்களில் கூறப்பட்டுள்ளன. இன்னு மிருக்கின்றன சில சிறு அணிகளின் பெயரும் இலக்கணமுந் தெரிந்துகொள்ள விரும்புகின்றவர்கள் "தண்டி யலங்காரம்" என்னும் நூலிலிருந்து தாமாகவே எளிதில் கற்றுக்கொள்ள இயலும். பொருளிலக்கணத்தில் ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் அகப்பொருளை 1928-1929, வருட வால்யூம்களில் எழுதி யிருக்கின்றார். பிறகு புறப்பொருள் ஆரம்பிப்போம். நளவெண்பா முடிந்ததும் 'அஷ்டப்பிரபந்தம்' என்னும் நூலை நம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ள நினைத்திருக்கின்றோம். யாப்பிலக்கணத்தின் முக்கியமான பாகங்கள் இப்பொழுது சுருக்கமாக எழுதப்பெற்று வருகின்றன. இதன் விரிவையும் விளக்கத்தையும் 1931 வருட வால்யூமில் காணலாம்.

---



# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[216-வது பக்கத் தொடர்ச்சி]

கீ

747 கீசகந் தூக்கணமுங் கவியும் வேயும்.
748 கீத மிசையும் வண்டு மூங்கிலும்.
749 கீரம் பாலுந் தீபமுங் கிளியும்
காரிப்புள்ளுங் கழற லாகும்.
750 கீலால முதிரமுங் காடியு நீரும்.
751 கீலம் பிசினும் நாணு மாகும்.
752 கீழ் கிழக்கு மிடமுங் கயமையுங் கீழும்.
753 கீழ்தல் கீண்டலுங் கிழித்தலு மாகும்.

கு

754 [1] குசமே செந்திருக்கம் பூவுமலர்ப் பொதுவும்.
755 குஞ்சங் கூனுமீ யோட்டியுங் குறளும்
குறளைச் சொல்லுங் குன்றியு நாழியும்.
756 குஞ்சரங் குவளையும் யானையு மாகும்.
757 குடம்பை முட்டையுங் கூடு மேரியும்.
758 குஞ்சியாண் மயிரும் புள்ளின் பார்ப்பும்
குன்றியின் புதலுங் கூற லாகும்.
759 குடங்கர் குடிசையுங் கும்பமு மாகும்.
760 குடந்த மஞ்சலியுந் திரட்சியு மாகும்.
761 குட்டமோர் நோயும் குளமு மாழமும்.
762 குடியூருங் குலமும் புருவமுங் குடியும்
கோத்திர முமெனக் கூற லாகும்.
763 குடஞ்சுட் டாவு மெருமையு மாகும்.
764 குடினைபுட் பொதுவுங் கூகையு மாறும்
பதியுங் குச்சும் பகர லாகும்.
765 குடுமி வில்லும் வெற்றியு முச்சியும்
குவட்டி னுச்சியு மாண்மயிரு மாகும்.
766 குடங்கூத்தும் பசுவுங் குடமு நகரும்
கழைக்கட் டியுமா லாடலு மாகும்.
767 குடை குடையுங் கொடையும் கல்லையுமாகும்.
768 குண்டம் பன்றியுங் குண்டமு மாகும்.
769 குணுங்கர் தோற்கருவி யோரும் புலையரும்
குயிலுவ ரும்மெனக் கூற லாகும்.
770 குண்டு சிறுசெய்யுங் குண்டு மாழமும்
ஆண்குதிரையுங் கோறலு மறைய லாகும்.
771 குணில் குறுந்தடியுங் கடிப்புங் கவணும்.
772 குணங்கயிறும் பண்புங் கும்பமும் நீர்மையும்
வில்லின் நாணும் விளம்ப லாகும்.
773 குண்டலம் விண்ணுங் குழையும் வட்டமும்.
774 குத்தி மண்ணு மடக்கமு மாகும்.
775 குத்திரம் வஞ்சமு மலையு மாகும்.
776 குதைவிற் குதையும் பசியு மாகும்.
777 குத்தல் கொடுத்தலுங் குத்தலு மாகும்.
778 குந்தமோர் நதியும் நோயும் வேலும்
குருந்தமுங் குதிரையுங் கூற லாகும்.
779 குபேரனம் புலியுங் குபேரனு மாகும்.
780 குமரன் கட்டிளமையு முருகனு மாகும்.
781 கும்பி சேறும் வயிறுங்குஞ் சரமும்
நரகமு மெனவே நவில லாகும்.
782 கும்பசன் குறுமுனியுந் துரோணச் சாரியும்
783 குமுத மடைப்பு மோசையு மாம்பலும்
நெய்தலுந் திக்கானையு நிகழ்த்த லாகும்.
784 குமரிகற் றாழையுங் கன்னியுங் காளியுங்
கொற்றவையு மமையும் கோள நதியும்
அணங்கு மெனவே யறைய லாகும்.
785 கும்பம் ராசியுங் குடமுங் கும்பியின்
மத்தகமு மெனவே வழங்க லாகும்.
786 குயிறல் கூவலுஞ் செறிதலுங் குடைதலும்
செய்தலுந் தாண்டலு மாய்தலு மாகும். [illegible]
787 குய்வு கறிகரித்தலுங் குளிமணப் புகையும்.
788 குய்யம் யோனியுங் குத்திரமு மறைவும்.
789 குயமரி வாளுங் கொங்கையு மிளமையும்.
790 குயில் கோகிலமு மேகமு நிரையுந்
துவாரமு மகவானுஞ் சொல்ல லாகும்.
791 குரையிடைச் சொல்லுங் குதிரையு மோசையும்.
792 குருவி புள்ளு மூல நாளும்.
793 குருகு புள்ளு மிளமையுங் கொலனும்
கோழியு மூலமு நாரையுங் கைவளையும்
வெண்மையுங் குருக்கத் தியுமுலை மூக்கும்
நாகு மெனவே நவில லாகும்.
794 குரம்பை குடிலு முடலு மிசையும்.
795 குருமாத் திரையும் வியாழமு முயர்ச்சியும்
குரவனு நிறமும் பெருமையு நோயும்
குரவமு மெனவே கூற லாகும்.
796 குரல்பல் குரலுங் கூந்தலுஞ் சிறகும்
கதிருந் தினையும் யாழி னரம்புஞ்
சதங்கையும் பாடலமும் வாசிக் கோவையும்
இசையுந் தொண்டையு மியம்ப லாகும்.
797 குரும்பைபுற் சோறு மிளநீருங் குரும்பையும்.
798 குரவையோர் கூத்துங் கடலு மாகும்.
799 குரங்[கி] கள்சந் திரனு மாகும்.
800 குருட னந்தகனு மழைக்கோளு மாகும்.
801 குரங்கரியும் வளைவும் விலங்கின் பொதுவும்.
302 குருதி செவ்வாயுங் குருதியுஞ் சிவப்பும்.
803 குரம்வாசிக் குளம்புஞ் சேதாவு மாகும்.
804 குல்லை கஞ்சாவும் வெட்சியுந் துழாயும்
805 குலமி ரேபதியுஞ் சாதியுங் கோயிலும்
கூட்டமு மில்லமுங் கூற லாகும்.
806 குலைசெய் கரையு மம்பின் குதையும்
காயின் கொத்தும் வில்லு மாகும்.
807 குலிங்கமூர்க் கருவியும் வாசியு மாகும்.
808 குவமெலை யுச்சியு மலையுமரக் கொம்பும்.
809 குவலையம் பூமியுங் குவளையு செய்தலும்.
810 குவவு திரட்சியுங் குவிதலும் பெருமையும்.
811 குவளைவிழியு செய்தற் பூவும்.
812 குவாலே குவிதலு மேடு மாகும்.
813 குழலாண் மயிரும் பெண்மயிரும் துளையும்
இசைக்கரு வியுமென வியம்ப லாகும்.
814 குழியே வயிறுங் குண்டு மாகும்.
815 குழிசி மிடாவும் பானையு மாகும்.
816 குழைகுண் டலமுந் தளிருஞ் சேறும்
துவாரமுங் காடும் படையுறுப்பு மாகும்.
817 குழியம் பார வளையுந் திரட்சியும்.
818 குழையே பாட்டு மிசையு மாகும்.
819 குளங்குளமு நெற்றியுஞ் சர்க்கரையு மாகும்.
820 குளியம் வேங்கையு முருண்டையு மாகும்.
821 குளிர்குட மூழாவு மழுவு நண்டும்
கவணுங் குளிர்ச்சியு மீனினத் தொழுக்கமும்
இருத்தலு [2] மிலைமூக்கரி கத்தியு மாகும்.
822 குளிரி குடமுழவு நண்டு மாகும்.
823 குறும்பொறை குறிஞ்சி நிலத்தூரு மலையுங்
காடு மெனவே கழற லாகும்.
824 குறிஞ்சிமலைச் சார்பும் யாழுமோர் பண்ணும்
இசையுஞ் செம்முள்ளியு மியம்ப லாகும்.
825 குறளே பூதமுங் குறளரும் குறுமையும்.
826 குற்றல் பறித்தலுங் கோறலு மாகும்.
827 குறுகல் பறித்தலுங் கிட்டுதலு மாகும்.
828 குறடு திண்ணையும் பலகையு மாகும்.
829 குறுந்தடி குணிலும் பொதிப்பெயரு மாகும்.
830 குறுமை யழங்குங் குறுகினவு மாகும்.
831 குன்ற மலையுஞ் சதையமு மாகும்.
832 குவ்வே புவியும் நான்கா முருபும்.

---

(பிரதி)—1 குசமை.

(பிரதி). 2. மூலைமூக்கரி;

# திருக்குறள் நீதி

பொருட்பால்—3. ஒழிபியல்

[153-வது பக்கத் தொடர்ச்சி]

### 1. குடிமை

1. நற்குணம் நாண மிற்பிறந்தார்க் குண்டு.
2. ஒழுக்கமெய் நாண மிழுக்கா ரிற்பிறந்தார்.
3. நகையாதி நான்கும் வகையாங் குடிக்கு.
4. கோடி பெறினுங் குன்றுவ செய்யார்.
5. இட்டுண்ட குடியார் முட்டின்றி வாழ்வார்.
6. அற்றா ரேனுங் குற்றம் புரியார்.
7. பெரியோர் குற்றமே பெரிதாய்த்தோன்றும்.
8. நலத்தின்கணெழுகாணைக் குலத்தின்கணையுறும்
9. குலநலத் தியல்பு குணத்தால் விளங்கும்
10. நலம்வேண்டில் நாணுக குலம்வேண்டிற் பேணுக.

### 2. மானம்

1. சிறப்பீனுஞ் செயலிற்பிறப்பொழுக்கம் பேணுக.
2. பேராண்மை வேண்டிற் சீரல்ல செய்யற்க.
3. பெருக்கத்தே பணிந்து சுருக்கத்தே துணிக.
4. நிலையிழிந்த மாந்தர் தலையிழிந்த மயிரொப்பர்.
5. பெரியோர் தாழ்வர் சிறுபிழை செய்யின்.
6. இகழ்வார்பின் செல்லல் புகழ்குன்றிநரகுய்க்கும்
7. ஒட்டாரைச் சார்தலின் கெட்டே னெனவிரு.
8. மான மிழந்தபின் ஊன்வளர்த் தென்பயன்.
9. அவமான மாற்றார் கவரிமா வொப்பர்.
10. இழிவுழிச் செத்தாரைத் தொழுதேத்து முலகு.

### 3. பெருமை

1. ஒளியொருவர்க் கூக்க மிளிவிற் கஃதில்லை.
2. பிறப்பொக்கு முயிர்க்குச் சிறப்பொவ்வா செய் [கையான்
3. மேலுங் கீழும் பிறப்பல தொழிலே.
4. தன்னைத்தான் கொண்டொழுகின் பின்னைத்தான் [பெருமை
5. பெருமை யுடையரே யரியது செய்வர்.
6. சிறியா ரெண்ணார் பெரியரைப் பேணல்.
7. சிறியார் பெருமிதஞ் சீரைக் குலைக்கும்.
8. தன்னைவியப்பன்சிறியன்பின்னைப்பணிவன்பெரியன்
9. சிறியோர் செருக்குப் பெரியோர்க் கில்லை.
10. சிறியோ ரெல்லாங் குறையே கூறுவர்.

### 4. சான்றாண்மை

1. சான்றோர்க் கெல்லாஞ் சற்குண மியல்பாம்.
2. குணநய நலத்திற் கிணையிலை வேறு.
3. அன்புநா ணாதி யின்பமாஞ் சான்றோர்க்கு.
4. பிறன்குறை கூறாரைப் பெரியோ ரெனத்தகும்.
5. பணிவுடை யார்க்குப் பகைவரே யில்லை.
6. சால்பிற்குக் கட்டளை தோல்வியை யேற்றல்.
7. இன்னார்க்கு மினியன இயற்றுவர் சான்றோர்.
8. அழிபசி சால்பிற் கிழிவாவ தில்லை.
9. துன்பமே யலைப்பினு மன்பறார் சான்றோர்.
10. சான்றாண்மை குன்றின் தாங்கா துலகம்.

### 5. பண்புடைமை

1. எண்ணுடைமையெவர்க்கும் பண்புடையதாகும்
2. அன்புங் குடிப்பிறப்பும் பண்புடைமை காட்டும்
3. குணமொத் திராக்கா வுடலொத் திருந்துமென்
4. பண்புடைமை கண்டு பாராட்டு முலகு.
5. பகைப்பினும் பண்புளார் திகைத்துவெகுளார்.
6. பண்பியல் குன்றின் மண்ணியல் குன்றும்.
7. அரமொத் திருப்பினு மரமொப்பர் பண்பிலார்.
8. நண்பாற்றா ரிடத்தும் பண்பாற்றல் நன்று.
9. உறவுசெய் தறியார்க் குலகிய லில்லை.
10. பண்பிலான் கைப்பொருள் பலனற்ற தாகும்.

### 6. நன்றியில் செல்வம்

1. தேடிவைத் துண்ணுதான் செத்தாரி லொன்று.
2. பொன்தேடிப் புதைப்பார்க்குப் பேய்ப்பிறவி [வாய்க்கும்
3. புகழ்வேண்டா லோபி புவிக்கொரு பாரம்.
4. ஈயா லோபிக் கெஞ்சுவ தென்னை.
5. தேடியிட் டுண்ணார்க்குக் கோடி யிருந்துமென்.
6. அருந்தா னீயானின் பெருஞ்செல்வ மேதம்.
7. வருந்துவோர்க் கீயாப் பெரும்பொருள் பாழே.
8. நச்சுமரமே வறிஞரான் நச்சப் படாதான்.
9. பாவிகைப் பொருளோ தாவிப்போம் பிறர்க்கு.
10. மாரி வறத்தல்நேர் சீருடையான் வறுமை.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

**டானிக்குகள் :**

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |

குழந்தைகளுக்கு

| | |
|---|---|
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸஹிதா (டானிக்) | 1-0-0 |




**தைலங்கள்:**

| | | |
|---|---|---|
| சந்தனாதி | 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக | " | 0-12-0 |
| பிருங்காமலக | " | 0-12-0 |

ஸ்திரீகளுக்கு

| | |
|---|---|
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ.மேடிசேட்ட-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்த நறுமணக் கூந்தல் எண்ணெய் காஸ்டராலகஸ்

ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]





## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இனைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

**தமிழகராதி ஆதார நூற்றெகுதி**

**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

**திருக்குறள்**

**மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்**

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா 0-6-0

**கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**

**திராவிடப் பிரகாசிகை**

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென் மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசகசாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருங பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், குவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.

**ANCIENT JAFFNA**

**MUDALIAR C. RASANAYAGAM C. C. S.**

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

KALANILAYAM
Purasawalkam, Madras.



## வர்த்தமானம்

**நாட்டின் நலத்திற்கு வழி:**—இப்பொழுது பம்பாயிலிருக்கும் ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி, நாட்டின் நலத்திற்கு வழி யிதுவென விடுத்த அறிக்கை வருமாறு:—

"எனது வடஇந்தியப் பிரயாணம் முடிவுற்றது. பல விடங்களைப் பார்வையிட்டேன். கிராமங்களில் வாழும் ஜனங்களின் நிலையையும் கண்டேன். இப்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல்நிலையும் பொருளாதார நிலையும் எங்கும் ஓரமைதியின்மையைப் பரப்பியுள்ளன. எனவே ஜனநலத்திற்குரிய ஆக்கவேலைகளில் மாந்தர்மனம் பாயவில்லை. இனி வரவிருக்கும் சீர்திருத்தம் நமது சமூக வாழ்க்கையில் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்தலாம் என்று நினைக்கின்றேன். காந்தியடிகளின் பெருநோக்கமும் தியாகமும் நமது நாட்டிற்கு நீர்பாய்ச்சியுளது. இனி நாம் உழுது பரம்படித்துஜனநலத்திற்கான பயிரை விளைவிக்கவேண்டியதுதான்.

"எல்லோருக்கும் ஆரம்பக் கல்வியும் பக்ஷபாதமில்லாத சாஸ்திரீகமான பொருளாதார முறையும் தருவதானவோர் 10 வருடத் திட்டம் ஒன்று போட்டு இராஜ தந்திரிகள் உழைக்கவேண்டும். கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வேண்டுவனவெல்லாம், ஆரம்பக் கல்வியும், மின்சார அபிவிர்த்தியும், நிலமும், சுகாதாரமுமே. இன்ன முறையில் உடனே கிராமப் புனருத்தாரண வேலை துவக்கப்படவேண்டும்."

இச்சொற்றொடர்கள் தரும் பொருள்தான் என்னவோ.

***

**ஸர். பி ஸி. ராய் பேசுகின்றார்:**—திருவாங்கூரில் ஸர். பி. ஸி. ராய் கூறியதாவது:—திருவாங்கூர் மக்கள் தமது நாடான திருவாங்கூரின் நலத்தை நாடுவது முறையாகுமெனினும், தாங்கள் முதலில் இந்தியர் என்பதை மறக்கலாகாது. நம் நாட்டார் யாத்திரை செய்யும் பழக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தாங்கள் இந்தியர் என்னும் எண்ணம் ஏற்படும். மேலும் நாம் காரியசாத்யமான காரியங்களைத் தெரிந்து முயலும் பயிற்சி பெறவேண்டும். பொறுமையும் தைரியமும் வேண்டும். கைத்தொழில் அபிவிருத்தியில் நாட்ட முடையவர்களாக விருக்கவேண்டும். படித்து உத்தியோகம் செய்யும் நோக்கமுடையவர்களாய் நாம் இருத்தல் கூடாது. கல்விக்காகக் கல்வி கற்கவேண்டும் என்னும் எண்ணம் இப்பொழுது நம்மை விட்டகன்றுவிட்டது. நாம் வியாபாரியாகவும், விவசாயியாகவும், கைத்தொழிலாளியாகவும் இருக்க ஆசைப்படவேண்டும். அத்துடன் பொதுஜன சேவையும் செய்துவரவேண்டும்.

***

**ஒரு மாதின் ஆராய்ச்சி:**—இர்விங் என்னும் ஒரு ஆங்கிலேயமாது, லண்டனில் உள்ள ஒரு தேப் பானக் கடையிலிருந்து தினம் ஒன்றிற்கு 200 கப் தேத்தண்ணீர் வரவழைத்துச் சாப்பிடுகின்றாராம். அம்மாது தேயிலையின் குணகுணங்களைக் கண்டுபிடிக்கவும், அப்பானத்தினால் மனிதனுக்கு ஏற்படுகின்ற பலாபலன்களை ஆராய்வதற்காகவும் இப்படிச்செய்கின்றாராம்.

***

**சங்கீதத்தின் சக்தி:**—நார்வே நாட்டு ஆராய்ச்சிக்காரர்களில் ஒருவர் பலநாள் ஆய்ந்து வந்துளமுடிவு வியப்பதற்குரியதாயிருக்கின்றது. மாமிசங்கள் இருக்குமிடத்தில் பாடிக்கொண்டிருந்தால், அவை மாதக்கணக்கில் கெடாதிருக்கின்றனவாம். இன்னும் அவ்வறிஞர் சங்கீதத்தின் சக்தியை முற்றிலும் அறிய ஆராய்ந்துகொண்டிருக்கின்றாராம்.

**சேவை சங்கம்:**—செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள நல்லாற்றூர் என்னுமிடத்தில் இருக்கும் ஜமீன்தார் ஸ்ரீமான் M. R. மாணிக்கராஜமுதலியார் தமது நிலத்தில் 25 ஏக்கரை, சென்னை சரஸ்வதி சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் சேவைசங்கத்திற்கு இனமாக அளித்துள்ளாராம். இங்கு ஹரிஜன நலனுக்குரிய வேலைக்குத் தொண்டர்களைத் தயார்செய்யவும் ஹரிஜனங்களுக்குக் கல்விபோதிக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த 25 ஏக்கர் நிலங்களில் விவசாயப்பண்ணைகளும் கைத்தொழில் சாலைகளும் நிறுவப்பெற்று, வீட்டுக் கைத்தொழில் கற்பிக்கப்படும். சரஸ்வதி சங்கத்தைச் சேர்ந்த 3 சாதுக்கள் இப்பொழுது இச் சேவை சங்கத்தில் வேலை செய்துவருகின்றனர் என்று தெரிகின்றது.

***

**ஸ்ரீமதி அன்னி பெஸண்டு:**—பிரம்மஞான சங்கத் தலைவியான ஸ்ரீமதி அன்னி பெஸண்டு அம்மையார் நோயுற்றிருக்கின்றனராம். அவர் தாம் அடுத்த ஜன்மத்தில் இந்தியாவில் க்ஷத்திரியவகுப்பிற் பிறந்துஇந்தியாவிற்குத் தொண்டுசெய்யப்போவதாகக் கூறுகின்றாராம்.

***

**அற்புதக் கப்பல்:**—அமெரிக்காவில் S. S. மான்ஹிடன் என்னும் ஒரு புதிய கப்பல் கட்டப் பெற்றிருக்கிறது. அது 750 அடி நீளமும், 320,000 டன் நிறையுமுள்ளது. அக்கப்பலில் 1250 பேர் சகல வசதிகளுடனும் பிரயாணம் செய்யலாமாம். அக்கப்பல் மணிக்கு 28 மைல் வீதம் செல்லுமாம். பிரயாணிகளின் வசதிக்கான பல ஏற்பாடுகள் இக்கப்பலில் செய்யப்பெற்று இருக்கின்றதாம். குளிர் அதிகமாயின் உஷ்ணத்தைத் தரவும், உஷ்ணம் அதிகமாயின் குளிர்ச்சிதரவும் மின்சார மூலம் இக்கப்பலில் ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளதாம். படக்காட்சிச்சாலைகள், நடனசாலைகள், உலாவுவதற்கிடங்கள், விளையாட்டு ஸ்தலங்கள், பத்திரிகை நிலயம் முதலியவைகள் இருக்கின்றனவாம். இந்தக் கப்பலில் 8 தளங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இக்கப்பலைக் கட்டி முடிக்க 10500000டாலர்கள் பிடித்தனவாம். உலகிலே இவ்வளவு பெரியதும் இவ்வளவுவசதிகளைஉடையதுமான கப்பல்வேறு இல்லையாம்.

***

**ஸ்ரீமான் கந்தையா** என்னும் இலங்கை வாசி ஒருவர் சைக்கிளில் உலகயாத்திரை செய்வதற்காகஇரண் ஆண்டுகளுக்குமுன் புறப்பட்டு, மலைநாடுகள், பர்மா முதலிய விடங்களைப் பார்வையிட்டு, பர்மாவிலிருந்து சைக்கிள் மூலமாக வட இந்தியா வந்து அங்கிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்துள்ளார். இனி அவர் ஐரோப்பிய நாடுகள் செல்வார் என்று தெரிகின்றது. ஜலமார்க்கத்தை மாத்திரம் அவர் கப்பல் மூலம் கடப்பார். தரைமார்க்கத்தைச் சைகில் மூலமே கடப்பாராம்.

***

**சோவியத் ருஷியா:**—ஸ்ரீமான் ஜவஹரிலால் நேரு ருஷியா சென்று, அங்கு நடைபெறும் அரசியல் முறையையும் வாழ்க்கை முறையையும் நேரில் பார்வையிட்டு, வரைந்த புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்புப் பாரதி பிரசுராலயத்திலிருந்து வரப்பெற்றோம். இப்புத்தகத்தகம் கிரௌன் ஸைஸில் 183 பக்கங்களைக் கொண்டது. லெனின் முதலிய தலைவர்களின் படமும் பொருட்காட்சிச்சாலைகள் முதலியவைகளின் படங்களும் நல்ல காகிதத்தில் அச்சிடப்பெற்றிருக்கின்றன. ருஷிய நாட்டுக் குடி அரசியல்முறை, பொதுவுடைமை முறை, மணமுறை, குற்றமும் தண்டனையும் அனையபலவிடயங்கள் இதனில் விளக்கப்பெற்றிருக்கின்றன. இப்புத்தகத்தின் விலை ரூ. 1-4-0 வேண்டுபவர்—பாரதி கார்யாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா, என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

189146


# — கம்ப ராமாயணம் —

## பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

### ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு | ரூ. | 1 | 0 | 0 |
| 5 டப்பிகள் | ரூ. | 4 | 0 | 0 |

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

### கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.
ஏழணு ஸ்டாம்புக்கு 2 புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஒரு முக்கிய சங்கீத நூல்

### “வர்னமாலிகை”

சங்கீத ஆசிரியர்களுக்கும் கர்னாடக சங்கீதம் அப்பியசிக்கிறவர்களுக்கும் வேண்டிய நூல். ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் சங்கீத பாடசாலைகளிலும் இருக்க வேண்டியது. 40 ராகங்களுக்கு லக்ஷணங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு 12.

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பினேட், மதராஸ்.

### NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

| | |
|---|---|
| New Business Completed During 1932 ... | ... Rs. 1,55,66,720 |
| Out of a business of | ... Rs. 1,96,70,000 received in proposals. |

Life Assurance is security — for the policyholder from an investment point of view. — for the policyholder and after him for his wife and children.

| | |
|---|---|
| Claims paid over | ... Rs. 1,00,00,000 |
| Total Assets exceed | ... Rs. 1,90,00,000 |

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

### FIRE & ACCIDENT RISKS

covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)